திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

மாலை : 9 4—11—55 : வெள்ளி : : விலை 3 அணு மலர் : 12

"மித்திரன் பாட்டி" கதை அளக்கிருள்!

திராவிடச் செல்வன் தட்டிக் கேட்கிருன்!

தமிழகத் தின இதழ்களில், 'சுதேசமித்திரன்' வயது முதிர்ந்த (பாட்டியின்) நிலையை அடைந்துள்ள ஏடு! இதனை எழுத்தாளர் உலகம் நன்கு அறியும். இந்தப் "பாட்டி" தனது வாழ் நாளில் எத்தனையோ வித்தைகளைக் காட்டி யிருக்கிருள். அவற்றுள் சிலவற்றை மாற்றிக் கொண்டு மிருக்கிருள்! வயது சென்றவள் வாலிப மங்கைபோல தன்னை அலங்கரித்துக் கொள்ளலாமா யென்று யாராவது கேட்டால், காலத்துக்கேற்ற மாறுதலைக் கொள்வதுதான் பொருத்தம் என்று பதில் கூறி நடையைக் கட்டுவாள் இந்தப் பாட்டி!

ஆனல் இந்தப்புத்தி—எதற்கு மிகவும் அவசியமோ அந்தப் பிரச்னையில் மித்திரன் பாட்டிக்கு ஏற்படவில்லை. பத்திரிகை தர்மத்தைப்பற்றி படிதாண்டா பத்தினியைப்போல ஓயாமல் பேசுவர் இந்த மித்திரன் பாட்டியும், இவளைப்போன்றபொக்கைவாய் கிழடுகளும், நடைமுறையிலோ அதற்கு நேர்மாருன செயல்!

தான் சார்ந்துள்ள கட்சியாயினும் வேறு எந்தக்கட்சியாயினும் பத்திரிகைத் தொழிலில் பொதுப் பிரச்னைகளில் பதிவிரதா தன்மையை இழந்து விடக்கூடாது. அப்படி இழந்தால் நமது மாபெரும் பாட்டியிருந்தாளே--பாரதமாதா அந்த அம்மைக்குத் துரோகம் செய்வதாகும் என்று இன்றைய மித்திரன் பாட்டிகள், மயிலையிலும், தியாகராய நகரிலும், சமயம் நேரும்போதெல்லாம் மக்கள் மன்றங்களிலும் வார்த்தைகளை அள்ளி வீசுவர். ஆனல் செயலிலே மகா மகா மட்டம்!

இந்தப் பாட்டிகள்-பத்திரிகை உலகில், யார் யார் 'பத்தினி' தர்மத்திலிருந்து தவறிவிட்டவர்கள் என்று எடுத்துக் காட்டுகிருர்களோ, அவர்களிடத்திலாகிலும் கூடுமான அளவு ஒழுக்கத்தைக் காண முடியும். உபதேசம் செய்யும் மித்திரன் பாட்டிகளிடமோ கடுகளவும் அந்தகண்ணியத்தைப் பார்ப்பதற்கில்லை!

வெள்ளை காக்காய் இறந்து விட்டதைப்பற்றி சென்னை கவர்னர் பிரகாசா அழுதாராமே-அந்தக் கவர்னர், மித்திரன் பாட்டிகளின் பிறவிப் புத்தியைக்கண்டு அழக்கூடுமென்று கருதுகிறேன்.

சுருங்கக் கூறவேண்டுமானல், தொட்டில் டழக்கம் சுடுகாடு மட்டும் என்பார்களே அதுபோல இந்த மித்திரன் கோஷ்டிகளிடம் குடிகொண்டுள்ள இந்தப் போக்கு அப்படியே நிலை பெற்று வளர்ந்து விட்டது. அதனை எடுத்துக் காட்டுவதே இந்த உரையாடலின் விளக்கமாகும்.

●

மித்திரன் பாட்டி: தம்பி திராவிடச் செல்வா, நகர சபைத் தேர்தல்கள் நடைபெற்றதே அதன் முழு விவரம் தெரியுமா உனக்கு?

திராவிடச் செல்வன் :- பாட்டி நான் சார்ந்துள்ள கட்சியின் கொள்கைப்படி அந்தத் தேர்தலை நான் அவ்வளவு முக்கியமாகக் கொள்ளவில்லை. ஏதோ பொதுவாக தேர்தல் முடிவுகளைப் பத்திரிகை வாயிலாக அறிந்தேன், அவ்வளவுதான்.

சு. மி. பா :- ஏண்டா தம்பி என்கிட்டயே உன் வித்தையைக் காட்டுகிருயா—என் வயதில் உன்னைப்போல எத்தனைப் பேர்களைப்பார்த்திருக்கிறேன். விருது நகரில் உங்கள் கட்சிக்காரர்கள் படுதோல்வி அடைந்து விட்டார்களே அதைப்பற்றிக் கேட்க கேட்க வெட்கமா யிருக்கிறதாக்கும்?

தி. செ-ஆமாமாம், மித்திரன் பாட்டி, விருதுநகர் நகரசபைத் தேர்தல் முடிவுக்குத் தனித் தலைப்பு கொடுத்து நீ உன் முகத்தில் ஒட்டித்திரிந்த கோலத்தைக் கண்டேன். அதற்குப் பிறகு கோபிசெட்டி பாளையத்தில் ஆளும் கட்சியாகிய காங்கிரஸ் அடைந்த படுபாதாளத் தோல்வியையும் உன் முகத்தின் வாயிலாகக் காணலா மென்ருல் முடியவில்லை. ஏன் பாட்டி பத்திரிகை

நக்கீரன்

தர்மத்தைப்பற்றி பதிவிரதா உபதேசம் செய்து வரும் நீ, இப்படி ஓர வஞ்சனையாக நடப்பதற்கு வெட்கப் படுவதில்லையா?

சு. மி. பா—போடா குறும்புக்காரா, ஏதோ தப்பித் தவறி கோபியில் காங்கிரஸ் தோற்று விட்டதற்காக பிரமாதமாகப் பேசுகிருயே,

தி. செ—மித்திரன் பாட்டி, வயது சென்ற இந்தக் காலத்திலேயே இப்படி கைவரிசையைக் காட்டுகிருயே...உன் இளம் வயதில் இன்னும் யார் யாரை எப்படி...எப்படி...

சு. மி. பா—டேய் அதிகப் பிரசங்கி, உங்கஅய்யாகிட்டே சொல்லணுமா ?

தி. செ—உள்ளதைக் கேட்டா, அய்யா கிட்ட சொல்லணுமா, அண்ணகிட்ட சொல்லணுமா, என மிரட்டுகிருயே, வழியே போகிற என்னை அழைத்து சவடால் அடிக்க ஆரம்பித்தது நீங்கள் தானே பாட்டி?

சு. மி. பா : அதுக்கில்ல தம்பி, உன் சமத்து எப்படி இருக்குதுன்னு பார்த்தேன்....

தி. செ:- அப்படின்ன என் சமத்தில் இன்னும் கொஞ்சம் பாருங்க. ஏதோ விருதுநகரில் காங்கிரஸ் வெற்றியடைந்து விட்டது என்பதை விளிம்புகட்டிஉன் முகத்தில் தொங்க விட்டுக் கொண்டு கூத்தாடினயே, வேலூர், திருச்சி, திருவண்ணமலை, விழுப்புரம், தூத்துக்குடி, இன்னும் இதுபோல பல நகர சபைகளில் காங்கிரஸ் அரோகரா போட்டுக் கொண்டது மல்லாமல் தனக்கு முட்டுக்கொடுத்து நிற்க வைக்க சுயேச்சைகளிடம் அடி தண்டம் போடுகிறதே—இதையெல்லாம் ஏன் பாட்டி நீ உன் முகத்தில் விளிம்புகட்டி தொங்க வைத்து வீதிவலம் வரவில்லை. அப்படி செய்திருந்தால்தானே நீ பத்திரிகை உலகில் பேசிவரும் "பத்தினி" தர்மத்திற்கு அர்த்தமிருக்க முடியும்,

சு. மி. பா—சரிதான் போ தம்பி, உங்க கட்சிதான் உத்யோக பூர்வமா நகர சபைத் தேர்தலில் போட்டி போடல்லியே—வீண் பேச்சு எதற்கு?

தி. செ:—என்ன சு. மி. பாட்டி இதற்குள்ளேயே அலுத்துப்போயிட்டே, எங்கள் கட்சி உத்தியோகப் பூர்வமாக போட்டி போடாதது மட்டுமல்ல; கட்சித் தோழர்கள் தனிப்பட்டு போட்டியிட்ட சில இடங்களிலும் கட்சி

6ம் பக்கம் பார்க்க

மகத்தான வெற்றி

●

27—10—55 அன்று நடைபெற்ற மதுரை நகரசபைத் தேர்தலில், தொழிலாளர் பகுதியாகிய 9-வது வார்டில், கம்யூனிஸ்ட்கட்சி அபேட்சகர் தோழர் எஸ். ராமையா அவர்களைத் தோற்கடித்து மகத்தான வெற்றி பெற்ற தி. மு. க. மத்திய செயற்குழு உறுப்பினரும், மதுரை

மாவட்ட தி.மு.க. செயலாளருமான தோழர். எஸ். முத்து அவர்கள்

முதல் முகலாயப் பேரரசி — சரித்திரச் சித்திரம்

சுல்தானா ரசியா

கௌதமன்

21—10—55 தொடர்ச்சி

8

காத்திருந்த முத்துப் பல்லக்கையிலே அந்த முழுநிலவு முகத்தாள் மெள்ள வந்து அமர்ந்து கொண்டாள். காற்றிலே அசைந்தாடும் முல்லைக் கொடிக்கு தென்றலின் இனிமைத் தெரிவதைப் போல அந்தச் சிங்கார மலர்க்கொடிக்கு வாழ்வின் ருசியும், வாழ்க்கையின் பெருமிதமும், அரசபோகத்தின் மகத்துவமும் அப்போதுதான் தெரியலாயிற்று! தான் மீண்டுமோர் இளவரசியாகி விட்டோம் என்ற நினைவுச் சுழலே, அவளந்தக் கடைசி நேரம் வரையிலும் வருந்தி வருந்தித்தான் கவனப்படுத்திக் கொண்டிருந்தாள். அபலை வாழ்க்கையை அனுபவித்து வந்த அந்த ஆரணங்கிற்கு, அந்த முத்துப் பல்லக்கையின் ராஜரீகத் தோற்றம் உள்ளபடியே புதுமெருகிட்டுக் கொண்டிருந்தது என்றாலும் மிகையல்ல அது! அவளின் இன்ப நினைவுகள் அந்த ஓர் கண நேரத்திலே எங்கெங்கெல்லாமோ சென்று திரும்பி தன் வயப்பட்டுக் கொண்டிருந்தது.

இதற்குள் இறங்க வேண்டிய பள்ளி வாசலும் எதிரிலிருந்தது. இளவரசி ரசியாவோ எட்டிப் பார்த்தாள்! முகிலிடைச் சிக்கிய முழுநிலவு மெள்ள வெளிக் கிளம்பி வருவதைப்போல அந்த எழில்தாங்கும் ஒளி பிம்பம், திரையிட்டு மறைத்திருந்த பல்லக்கையினின்றும், கம்பீரமாக வெளிவந்தது! துயரச் சுரங்கத்துள் பல நாட்களாகத் தள்ளிமூடப்பட்டுக் கிடந்த அந்த ஒளிவிழியாளுக்கு தேன்சுரக்கும் புதுவாழ்வைத் தேடித் தந்ததல்லவா அந்தப் பள்ளிவாசல்! அதற்குள்தான் வேகமாக வழிநடந்தாள் ரசியா! தன்னிடத்தில் போய் அமர்ந்தாள்; தொழுதாள்! வரப்பிரசாத மளித்தனர் வரமளிக்கும் வாய்ப்பைப் பெற்றவர்கள்! வாழ்த்தினர்—வாழ்த்த வேண்டியவர்கள்!

ஆண்டவனின் நல்லாசி கிடைத்ததென்று மீண்டும் அங்கிருந்து வெளிவந்தாள் அந்தப் பைங்கொடியாள்! அரண்மனையிலே விண்ணதிர வெடி முழக்கம் கிளம்பியது அந்த ஆரணங்கைக் கண்டதுமே! இஸ்லாமிய முறைப்படி கொடுமைக்கரை நீக்கப்பட்ட தங்கமணி மகுடம்—ஒளிவிடும் வைரவாள்—நீதிதரப் பிறந்த செங்கோல் — இவையாவுமே தயாராகக் காத்துக் கிடந்தது அந்தப் பெண்ணரசிக்காக!

இளவரசி ரசியாவை சுல்தானா ரசியாவாக ஆக்கப்பட வேண்டிய நிகழ்ச்சிகள் சடங்குகள் அத்தனையும் தொடங்கின—முடிந்தன! இளவரசி ரசியா இப்போது சுல்தானாவாக ஆகிவிட்டாள்! கி. பி. 1236-ன் ஆரம்பம், அவளை அபலையாக்கிற்று என்றால்—அதே கி. பி. 1236-ன் முடிவு அவளை டெல்லிப் பீடத்திற்கே அரசியாக்கிற்று. கனவு பலித்தது. கண்ணீர் பலன் தந்தது! மகிழ்வு பூத்தது அந்த அரசிளங் குமரிக்கு! மரகதப் பசுந்தோகை விரித்தாடும் வண்ணமாமயில், களிநடனமும் புரிய ஆரம்பித்து விட்டால், எப்படிப் பரவசமளிக்குமோ அந்த எழிற் காட்சி, அதைப்போல இருந்தது அவள் களிப்புப் பெற்று, புன்னகையை வாரி யிறைத்த காட்சி!

'கண்டாரைக் கொல்லும் காரிகையாம் வடிவழகி—நிஜம்தான்!' என்ற உள்ளங்கவர் கற்பனைச் சித்திரத்திற்கு இலக்கான எத்தனையோ அழகுச் சிலைகளை உலகின் அந்தப் புரங்கள்; அதுவரை ஏராளமான அளவில் தயாரித்துத் தந்திருக்கிற தென்றாலும், ஆடலழகி ரசியாவுக்கு மட்டும், அதிலே ஒரு விதிவிலக்கு! அவள் மட்டும் கண்டார் உயிருண்ணும் வெற்றியாளாக இருக்கவில்லை—அவளுரைத்தான் மற்றவருண்ணும் வெற்றியாளராக இருந்தனர்! அந்த அபிசீனிய ஆணழகன் ஜமால்—அந்த எழிலழகியின் குளிர்பார்வைக்கு என்றைக்கோ தெவிட்டாத விருந்தாகி விட்டவன். ஆனால், மறைத்து வைக்கப்பட்ட அந்த எண்ணம் தோண்டி எடுக்கப்பட எவ்வளவோ நாட்களாயின! வெளியில் தெரிவிக்கப்பட முடியாத அந்த அடிமை, அவனையுமறியாமல் அந்த ஏந்திழையாளின் இதய வேந்தனாகி விட்டான் எப்போதோ!

அரசிக்கு அன்பு செய்கிறோம்—அடிமைத் தொழில் புரிகிறோம்—கடமையாற்றுகிறோம்—என்று மட்டுமே வெகு நாட்கள் வரையில், உணர்ந்திருந்தான் அந்த அடிமை! அவனுக்கு வேறொன்றும் தெரியாது! அந்த உரிமையை உள்ளத்திலிருத்தித்தான் அன்று மணிமுடிவிழாவின் போதும், ஓரக்கண்ணினால் தனது இளவரசியையே இமை கொட்டாது பார்த்துப் பார்த்துப் பரவசமடைந்து கொண்டிருந்தான் ஜமால். ஆனால் அவனின் தேர்ந்தெடுக்கப்படாத இதயராணியோ அவனின் அந்தப் பூரிப்பை அமுத ஊற்றெனண்ணி தனது இருவிழிகளாலும் அதனை வாரி வாரிப் பருகிக் கொண்டேயிருந்தாள்! ஒளிமுடியை மதத் தலைவர் அந்தக் குயில் மொழியாளுக்குச் சூட்டும்போது ஆணழகன் ஜமால் அடைந்த ஆனந்தம்—அட, அதுகூட ஓர்புறம் கிடக்கட்டும்! அந்த அடிமையின் பூரிப்பைக் கண்டு அவளடைந்த மகிழ்வுப் பெருக்கு இருக்கிறதே அதற்கு என்னதான் ஈடாக இருக்க முடியும்?

'பாவம் அடிமை!—கவடு, சூது அற்றவன்!—நமக்குப் பட்டம் கிடைத்தால் எவ்வளவு பூரிப்படைகிறான் பார்! என்ற எண்ணத்தையும் தாண்டி, வேறு கற்பனை யுலகிலே சஞ்சரித்துக் கொண்டிருந்தாள் ரசியா! ஆனால் அந்தக் கற்பனை யுலகிற்கு ஜமால் எப்படி வரமுடியும்! யார் அழைத்தார்களவனை! அந்த அடிமைக்குத்தான் ரசியாவின் உள்ளமே தெரியாதே...! வரம்புக்குட்பட்ட நன்றியுள்ள பணியாளனாக இருக்க மட்டுமே அவன் பழகிக் கொண்டவனல்லவா? பாவம்! அவனுக்கெங்கே சிகரத்தை எட்டிப் பிடிக்க வேண்டுமென்ற வானவெளி எண்ணங்களிருந்திருக்க முடியும்! வைரம் பொதித்த வாதான்! ஆனால் அது கழுத்தை யறுக்காது என்பதற்கு என்ன உத்திரவாதம்? எப்படியோ ஒன்று கொலு மண்டபத்திலே ரசியாவுக்கு மணிமுடி கிடைத்ததும் அவளுள்ளத்தில் மறைந்து கிடந்த எண்ணத்திற்கும் புதுமெருகு கிடைத்து விட்டதென்றே சொல்லலாம்!

இங்கோ ஆளும் உரிமை தந்த ஓம்ராக்கள், ஆளவேண்டிய முறைபற்றிய பிரகடனத்தையும் வாசித்தார்கள்!

இளவரசி ரசியாவை இந்த இஸ்லாமிய மண்டலத்தின் முதல் பேரரசியாக்குவதிலே, இம்மாமன்றம் மகிழ்ச்சி மிகக் கொள்ளுகிறது. மன்னர் ஆல்டாமிஷின் விருப்பப்படியே இந்த முடிவுக்கு நாங்கள் வரக் கொஞ்சம் தாமதமானாலும் 'அவரின் அபிலாஷையை—எப்படியோ ஒன்று; இன்று நிறைவேற்றிவிட்டோம். இனி புதிய அரசியார்தான் நமது கலாச்சாரத்தைக் கட்டிக் காக்கும் வீராங்கனையாவார்கள்! ஆட்சி நேற்றுவரை இருந்ததைப் போல இவர்களாட்சியில், இனியும் இருக்காது—இருக்க இடமில்லை—இருக்கவும் நாடு சம்மதிக்காது—இதனை மட்டும் இங்கு வலியுறுத்திக் கூற வேண்டியிருக்கிறது. மற்றபடி இளவரசியாருக்கு நமது அன்பு வாழ்த்துக்களையும் இந்த ஆட்சிப் பொறுப்பையும் இதன் மூலம் சமர்ப்பிக்கின்றோம்!' என்று வாசித்து முடித்தார் அந்தத் தலைவர்!

முடிதரித்த பெருமையோடு சடங்கை முடித்துக் கொண்டு வாக்குறுதி தந்தாள் ரசியா!

'குலப் பெருமையும், மதப் பண்பும், குன்றாமல் மக்கள் நலனும்—நல்வாழ்வும் கெடாமல், அவர்களுக்குத் திருப்தியளிப்பதிலேயே என் வாழ்நாளை நான் அர்ப்பணிக்கத் தீர்மானித்துவிட்டேன்! நீதியையும், நேர்மையையும், நிலைநாட்டவும்—சமத்துவத்தையும் கலாச்சாரத்தையும் வளர்க்கவும்—நான் போரிடவும் தயங்க மாட்டேன்! மக்களின் நம்பிக்கையை நான் சிதறடிக்க மாட்டேன்! அவர்களுக்காகவே நான் வாழுவேன்! இது நிச்சயம்! வாழ்க இத்திருநாடு! என்றுதான் வாக்குறுதி தந்துவிட்டுச் சென்றாள். வாழ்த்தொலியும் கிளம்பியது!

பட்டமளிப்புக் களைப்பைத் தீர்த்துக் கொள்ள நேரே அந்தப்புரம் சென்றாள் ரசியா. ஆனால் களைப்பு மட்டும் அங்கேயும் தீரவில்லை! விருந்துக்களும், கேளிக்கைகளும் அங்கேயும் அவளை எதிர் கொண்டழைத்தால் எப்படி ஓய்வு கொள்வாள் அந்தச் சிங்காரி. மதியம்—மாலை—இரவு—அப்போதும் ஓயவில்லை அந்த எக்களிப்பு!

ஆனால் அதே நேரத்தில் கவலை பெருக்கும், கரை புரண்டு ஓடிக் கொண்டிருந்தது ஓர் மூலையில்! ஆட்சி இழந்த ருக்னுதீன் அலறித் துடித்துக் கொண்டிருந்தான்! அவன் தாயோ—எதை எதையோ சொல்லி அவனைப் பித்தனாக்கிக் கொண்டிருந்தாள்! கவலை அவர்களைத் தழுவிக் கொண்டது. அப்பாவி மகன்—அகம் பாவத்தாய்—கைவிட்டுப் போன ஆட்சிச் செல்வம். இந்தச் சூழ் நிலையிலே ஏற்பட்ட பரதவிப்பு—ஒரு வேடிக்கை கலந்த சம்பவம்தான். கொலைபட்டும் கொடுமைக்காரர்கள் இம்மட்டோடு!!

சுல்தானாவாக ஆகிவிட்ட இள நங்கையோ இப்போது ஆட்சி செலுத்தத் தொடங்கி விட்டாள். இது பொறுப்புள்ள பணிதான் என்றாலும், புதியதல்ல அவளுக்கு! குவாலியர், தந்த அனுபவம் அவளுக்கும் இருக்கத்தான் செய்தது. வேட்டையாடத் தெரியாத வேடன் இருக்க முடியாததைப்போல், ஆட்சிபுரியத் தெரியாத அரசிளங்குமரியும் இருக்க முடியாதல்லவா! எனவேதான் சிரமமின்றி ஆனால் சிரத்தையுடன், அரசாளத் துணிந்தாள் ரசியா!

முதல் முதலாய்ப் பேரரசியாகி விட்டாள் ரசியா! ஆனால் கடைசியும் அவளாகவே முடிந்து விட்டாள்! இந்தியாவைப் பொறுத்த மட்டில், டில்லியிலே அரசாண்ட பெண்ணரசிகளின் பரம்பரையும், எண்ணிக்கைகளும், இரண்டே இரண்டுதான். அதில் முதல் ஒன்று, அடிமையரசி ரசியாவின் அடிமை அரசப்பரம்பரை. மற்றொன்று விக்டோரியா மகாராணியாரின் வெள்ளையர் பரம்பரை! இந்த 2000 ஆண்டுச் சரித்திரத்தில் இந்த இரு பெண்ணரசிகள்தான், டெல்லியிலே முடிசூட்டிக்கொண்டு ஆளவும் செய்தார்கள்! இஸ்லாத்தைத் தழுவிய இளவரசிகள் வேறு எத்தனையோபேர் வேற்று நாடுகளிலே அரசாண்டிருக்கிறார்கள், ஆனால் இந்தியாவிலே அரசாண்ட முதலும் கடைசியுமான இஸ்லாமியப் பெண்மணி ரசியா ஒருவள்தான்!

அதிலும் ஆட்சி கிடைத்த 4 ஆண்டுகள் வரையில் தான், அவளாலும் அரசாள முடிந்தது. அதற்கு மேல் சிக்கல்—கோளாறு—கொந்தளிப்பு—பரதவிப்பு—படுகொலை—இப்படித்தான் முடிந்தது அவளின் அரசவாழ்வும்! உய்த்துணர்ந்தால் மட்டுமே, புரியக்கூடிய சிக்கல்கள் அனேகம் உண்டு. ஆள்பவரிடையே வாசமலரின்மணத்தின் நிலையைப்போல, அரசபீடத்தின் ஏகபோக உரிமையும், வெகு விரைவில்—வெகுளிதில்மறைந்து விடுவதைக்கண்டு எத்தனையோ ஆட்சிக்காரர்கள் அஞ்சியிருக்கின்றனர்! பித்தராகியிருக்கின்றனர்! என்றாலும் இதெல்லாம் அரச பரம்பரையினருக்கு சகஜமான நிகழ்ச்சிகள்தான்!!

பட்டம் சூட்டிக் கொண்ட ரசியா மனநிம்மதி கொண்டே அரசாண்டாள்! கொலுமண்டபத்திலே ஆட்சியளித்தவரின் எதிரிலேயே, அவள் நற்பெயரெடுக்கப் பெரிதும் முயன்றாள்—முதலில்!

(தொடரும்)

நாங்குனேரி வட்டார ஆதிதிராவிடச் சங்கம்.

பம்பாய் தாராவியில் 13-10-55-ல் இரவு 8-மணியளவில் சங்கத் தலைவர் டி. ராஜமணி அவர்கள் அவசர நிமித்தம் தாய் நாடு செல்ல யிருப்பதால் அன்னாருக்கு பிரிவு உபசார கூட்டம் திரு வி. எஸ். முத்தையா அவர்கள் தலைமையில் நடைபெற்றது! எம். எ. சண்முகம் அவர்கள் தலைவருக்கு சங்கத்தின் சார்பாக கைத்தறி ஆடை அணிந்து வாழ்த்து கூறினர். பின் தலைவர் முடிவுரைக்குப் பின் துணைச் செயலாளர் தோழர் என். எஸ். கணேசன் நன்றி கூற கூட்டம் சுமார் 9 மணி ளவில் கலைந்தது,

தமிழ் இளைஞர் கழகம்

23-10-55 அன்று திரு. தி. அ. பாலசுப்ரமண்யம் தலைமையில் நடந்த உறுப்பினர் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

இந்திய சர்க்காரால் நியமிக்கப்பட்ட மாநில புது அமைப்பு திட்டக்குழுவின் அறிக்கை தமிழர்களுக்கு கேடு விளைவிப்பதாக இருப்பதால் அதை திருத்தி அமைக்குமாறும், தமிழக வடக்கிலும், தெற்கிலும் உள்ள தமிழ் பேசும் பகுதிகள் எவ்வித நிபந்தனையின்றி தமிழகத்துடன் சேர்க்கப்படவேண்டும் என்றும், போர்ட் செயின்ட்ஜார்ஜ் கெஜட் என்ற சர்க்கார் அறிக்கைகள் இனி ஆந்திரா கெஜட் என்பதுபோல தமிழக கெஜட் என்று அறிக்கைகள் வெளியிடப்பட வேண்டும் என்றும் சென்னை ராஜயம் இனி தமிழ்நாடு என்றே அழைக்கப்பட வேண்டும் என்றும் சர்க்காரை இக்கழகம் கேட்டுக்கொள்ளுகிறது.

செம்பியம் சுகாதார மன்றம்

23-10-55 காலை 9-மணிக்கு மறைமலையடிகள் நூல் நிலையத்தார் ஆதரவில் 20-வது வட்ட பல அமைப்புகளை அழைத்து "செம்பியம் சுகாதார மன்றம்" என்ற இணைப்புக் கழக மொன்று நிறுவப்பட்டது. கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

தலைவர்: திரு. ச. மாணிக்கம் (மறைமலையடிகள் நூல் நிலையத்தலைவர்), **செயலாளர்:** திரு. எஸ். இ. சுப்பிரமணியம் (சேவா சங்கத்தலைவர்), **பொருளாளர்:** திரு. மு. தங்கமணி (தி. மு. க. 20-வது வட்டம்).

○

கல்கிகளின் ஞானோதயம்!

மாநில புது அமைப்புக் குழு தனது அறிக்கையை வெளியிட்ட பின்பு கடந்த இரண்டு வாரங்களாக இந்தியத் துணைக் கண்டத்தின் ஒவ்வொரு பகுதிகளிலும் ஒவ்வொரு விதமாகக் குமுறல்களும் குழப்பங்களும் ஏற்பட்டு வருகின்றன. நமது தென்னகத்தைப் பொருத்த வரையில் சில விசித்திரமான — ஆனால் வேதனையான — யோசனைகளை கூறிவருகின்றனர், மேயர் சிதம்பரம், புதிய சபா நாயகர் கோபால மேனன், மலையாளப் பிரதேசக் காங்கிரஸ் பிரமுகர்கள் மற்றும் அரசியல் உலகில் நடமாடி வரும் படே படே ஆசாமிகள்!

இப்போது சென்னை ராஜ்யம் என்றழைக்கப்படும் பிரதேசமும் மைசூரும் திருவாங்கூர் கொச்சியையும் சேர்த்து 'தக்ஷிணப் பிரதேசம்' என்ற புதிய அமைப்பை உருவாக்க வேண்டு மென்பதே இவர்களின் ஆசையாம்! அதற்கு தீவிர ஏற்பாடுகளும் செய்து வருகின்றனராம்!

இந்தத் தக்ஷிணப் பிரதேச யோசனை குறித்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் கருத்து என்ன என்பதை ஏற்கெனவே நம் பத்திரிகைகள் எடுத்துக் காட்டியிருக்கின்றன—'திராவிடனும்' தெளிவுரை கூறியிருக்கிறது, தக்ஷிணப் பிரதேச விசித்திரத்தைக் குறித்து. ஆனால் அத்தக்ஷிணப் பிரதேச முயற்சியில் "கல்கி" திருக்கூட்டமும் ஈடுபட்டுள்ளதை அறிய நமக்கு ஆச்சரியமாயிருக்கின்றது. ஆச்சாரியாரின் ஆசியுடன் "புது ஏற்பாட்டுக் கமிட்டியின் சிபாரிசுகள்" என்ற தலைப்பின் கீழ் தலையங்கமே எழுதியிருக்கிறது, கல்கி தனது 23-10-55 இதழில் புதிதாக ஞானோதயம் பெற்றது போலச் சில உண்மைகளை வெளியிட்டிருக்கின்றது என்றால் இதுவரை ஒப்புக்கொள்ளாத—மறுத்துக் கூறிய — மறைத்து வந்த — சில உண்மைகளை இப்போது ஒத்துக் கொண்டு தனது 'தக்ஷிணப் பிரதேச' திட்டத்திற்கு ஆதாரமாகக் காட்டி யிருப்பதுதான்.

"மாகாண அரசாங்கங்கள் வெறும் பெயரளவுக்கே உள்ளனவேயன்றி உண்மையில் அதிகாரங்கள் யாவும் டில்லி மத்திய ஆட்சியாளரிடமே முடங்கி யிருக்கின்றன; இங்குள்ள மந்திரிகள் வெறும் அரசியல் பதுமைகள். இவர்களை ஆட்டிவைப்பவர்கள் டில்லிப் பூசாரிகள்தான்" என்று '1946-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ம் நாளன்று நடுநிசியில் டில்லி செங்கோட்டையில் சுதந்திரக் கொடி பறக்க விட்ட நாளிலிருந்து—அரசியல் சட்டம் உருவாகி அமுலாகிய போதிலிருந்தே—நாம் திராவிட இயக்கத்தினர் ஆதாரங்கள் பல காட்டி கூறி வருகின்றோம். இதற்காக நம்மை ஏசிப் பேசினர் ஏளனங் கூறினா பலர். ஏற்றுக்கொண்டார்களில்லை நாம் சொன்ன நடைமுறை உண்மையை. அக்கோஷ்டியில் தலை சிறந்த கல்கி தான் இன்று எழுதுகின்றது;

"ராஜ்யச் சட்ட சபைகளில் போட்டுக் காட்டும் பட்ஜெட்டுகள் வெறும் நிழற் படங்கள்தான் எதற்கும் டில்லிக்கு ஏறிச் சென்றுதான் விஷயங்கள் விவாதிக்கப் பட்டு முடிவாகின்றன: பொய்யான மாரீச மான்களையும் பேய்த் தேர்களையும் விட்டு விட்டு உண்மையை நேருக்கு நேராகப் பார்த்தோமானால் அகில இந்திய (டில்லி) நிர்வாகம் ஒன்றுதான் இப்போது காரியாம்சத்தில் நடை பெறுகிறது. சிலர் பெரும் பேச்சுகள் பேசுவதெல்லாம் வெறும் பேச்சுத்தான்."

நம் மீது—திராவிட இயக்கத்தினர் மீது—கொண்ட காழ்ப்பு எண்ணத்தால்—வஞ்சக, பொறாமை மனப்பான்மையால்—இதுகாறும் மறைத்து வைத்த கருத்துக்களை இன்று கொட்டுகிறது கல்கி. "தமிழர்களும் கேரளத்தைச் சேர்ந்த மலையாள மக்களும், ஆந்திரத் தெலுங்கர்களும் மைசூர் கன்னடியர்களும் ஒரு வழி வந்தவர்கள். ஒரே பண்பாடு பழக்க வழக்கமுடையவர்கள். தமிழ் மொழி வழி வந்தவைதான் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை. ஆகவே இந்த நான்கு பிரிவினரும் ஒத்து வாழ முடியும், ஒரே அரசியல் அமைப்பில்;

ஆனால் வட நாட்டவர் நம்மிலும் மாறுபட்ட இனத்தவர்—கொள்கை வேறுபாடு கொண்டவர்—காலாச்சார மாறுபாடுடையவர் அவர்களுடன் சேர்ந்து வாழ தென்னவர்களால் முடியாது" என்று எவ்வளவு காலமாக நாம் கூறிவருகிறோம்! எத்தனை மேடைகள்—எவ்வளவு மாநாடுகள்—நாடகங்கள்? வடநாடு—தென்னாடு என்று பேசுகின்றான் பார் வஞ்சகன், நாட்டுத் துரோகி இந்தியர்கள் எல்லோரும் ஒன்றே. ஏற்றத்

சண்முகம் குலசேகரன்

தாழ்வு ஒன்றும் கிடையாது. என ஏகத்துவம் பேசி நம்மைத் திட்டினரே தவிர நமது கூற்றுக்குச் செவிசாய்த்தனரல்லர்: கிண்டல் செய்தனர்.

"கேரளம் கேட்டதா? கன்னடம் கை கொடுக்கிறதா? ஆந்திரம் 'ஆமாம்' போடுகிறதா? என்றெல்லாம் ஆத்திரத்தில் அவசரக் கேள்விகள் எழுப்பினர்.

ஆனால் இன்று தக்ஷிணப் பிரதேச யோசனைக்குத் தாளம் போடச் செய்வதற்காகக் 'கல்கி' எழுதுகின்றதைப் படித்துப் பாருங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.

"ஒரே வரி வடிவத்தில் எழுதினால் கன்னடமும், மலையாளமும், தமிழும், ஒரே பாஷைதான். இம்மக்களின் பண்பாடு, படிப்பு, மனோபாவம், கோயில், குளம் எல்லாம் ஒன்றே.

சம்ஸ்கிருத பாஷையோடு ஒட்டிய பிராக்ருத பாஷைகள் வடக்கே பிரயோகத்தில் இருப்பது போல் இந்தத் தென் பிரதேசத்தில் தமிழும் தமிழின் இன மொழிகளுமே மக்களின் தாய் மொழி. சமீப காலம் வரை எல்லோரும் சென்னை சர்வ கலாசாலைக் கல்லூரிகளில் படித்துப் பழகி வந்தார்கள். மாமன் மகனும் அத்தை மகளும் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற தக்ஷிண ஆசாரத்தைக் கடைபிடிக்கும் மக்கட் தொகுதி தான் இவர்கள் அனைவரும். எல்லாவிதத்திலும் ஒரு கூட்டம். யோசித்துப் பார்த்தால் என்ன பேதம் உண்டு?

பிரிந்து போன தெலுங்கர்களும் வந்தால் வரட்டும். எப்போது வந்தாலும் வரட்டும். வற்புறுத்த வேண்டியதில்லை."

1942-ம் ஆண்டிலிருந்தே நாம் கூறி வருகின்றோமே மேற் கண்ட கருத்தை! 1955-ம் ஆண்டிலேதான் 'கல்கி'யின் புத்தியிலே ஞானோதயம் ஏற்பட்டது. போலும்! நாம்—திராவிட இயக்கத்தவர், கூறுகின்ற நல்ல கருத்துக்களைப் புரிந்து கொள்ளவே 'அவர்களுக்கு' பத்துப் பனிரெண்டு ஆண்டுகள் ஆகின்றன. மேலும் படியுங்கள்.

"தென்னாட்டு மக்கள் இந்த விஷயங்களையெல்லாம் தீர ஆலோசித்து, ஒரு முடிவுக்கு வந்து, ஏகமனதாக வற்புறுத்தி, வெற்றி காண வேண்டும். இல்லாவிடில் அகில இந்தியத் தராசில் தெற்கு தட்டு பாரம் இழந்து போய் நிற்கும்"

என்று எழுதி தென்னாட்டு மக்களை எச்சரிக்கிறது 'கல்கி' தனது தக்ஷிணப் பிரதேச ஏற்பாட்டை ஆதரிக்கு முகமாக.

ஆனால் தக்ஷிணபிரதேசயோசனை ஆதிக்க ஆசையிலும் டில்லியின் சூழ்ச்சியிலும் பிறந்தது என்பதைபுரிந்து கொள்ளவும், அல்லது இப்போதே புரிந்து கொண்டிருந்து தூங்குவதைப் போல பாசாங்கு செய்வதாயிருப்பினும் அதிலிருந்து தெளிவு பெற கல்கிகளுக்கு எவ்வளவு நாளாகுமோ தெரியவில்லை.

அண்ணா அவர்கள் ஒரு முறை கூறினார்கள். தமிழ் நாடு தமிழருக்கே! திராவிட நாடு திராவிடருக்கே! ஆந்திரம் தெலுங்கருக்கே — திராவிட நாடு திராவிடருக்கே! கர்நாடகம் கன்னடியருக்கே — திராவிட நாடு திராவிடருக்கே!" என்று. தமிழகமும் ஆந்திரமும், கேரளமும், கர்நாடகமும் பிரதேச வழி, மொழிவழி, உரிமை வழி தனித்தனி ராஜ்யங்களாக (Federal states) அமைய, அந்த நான்கும் இன வழி ஒன்றுபட்டு டில்லி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட தோழமைக் கொண்ட திராவிடக் கூட்டாட்சியாக இயங்க வேண்டும் என்பதைச் சாதாரண அறிவு படைத்தோரும் தெளிவாக உணரும்படியாக அண்ணா அவர்கள் விளக்கி யுள்ளார்கள்.

இன்று நாட்டில் 'கல்கி' போன்றவர்கள் கேரள, ஆந்திர, கர்நாடக மக்கள் உட்பட—மாகாண அரசுகளுக்கு அதிகாரமே கிடையாது, டில்லிதான் ஆதிக்கம் 'செலு'த்துகின்றது. என்பதை ஒத்துக் கொள்கின்றனர்; பொருளாதாரத் திட்டங்களில் வடக்கு தெற்கை வஞ்சிக்கிறது, என்பதை உணர்கின்றனர் தமிழர் — தெலுங்கர்—கன்னட மலையாளிகள் இன வழி மொழி வழி, பண்பாடு கலாச்சார பழக்க வழக்கங்களின் வழி, ஒன்று பட்டவர்கள் — ஒருமைப்பாடுடையவர்கள் என்பதையும் ஒப்புக் கொள்கின்றனர்.

இந்த நிலைமையில் தென்னாட்டு மக்களுக்கு எந்த நோக்கு கொண்டு எண்ணிப் பார்த்தாலும் நன்மையளிக்கக் கூடிய 'திராவிட நாடு' திட்டத்தை ஏன் ஒத்துக் கொள்ளக் கூடாது? என்பதைத்தான் தி. மு. கழகம் தலை நிமிர்ந்துக் கேட்கிறது,

தாய்மொழி யுணர்ச்சி பெருகி தத்தமது மொழியில் துரைத்தனம் நடாத்தத் துடித்துக் கொண்டிருக்கும் மக்கள் தக்ஷிணப் பிரதேச' வலையில் நிச்சயமாக விழுந்து விட மாட்டார்கள் 'ஒரு நாட்டின் சரித்திரம் போகும் போக்கில் அவ்வப்போது ஏற்படும் நிலைமைக்குத் தகுந்தவாறு இயற்கை வேகங்களை அலசி ஆராய்ந்து, தைரியத்துடன் புதுக் கருத்துக்களை உட்கொண்டு நிறைவேற்றுவது தான் அரசியற் புலமையாகும் என்று கல்கியாரே எழுதுவது போல இன்றைய தென்னாட்டு நிலைக் கேற்ற நலந் தரும் திட்டமான நாட்டுப் பிரிவினை கோரிக்கையை — டெல்லி ஆட்சி பீடத்திலிருந்து விடுபட்ட தனி அரசியல் உரிமையைப்பெறும் திட்டத்தை ஏற்றுக் கொள்வது தான் அரசியல் அறிவுடமையாகும் என்பதை 'அவர்கள்' கல்கிகள்—மித்திரன்கள்—மாற்றார்கள் — உணரட்டும்! இல்லாவிடில் இப்பிரச்சனையிலும் காலம் அவர்களுக்கு உண்மையை உணர்த்தும்!

●

திராவிடப் பூங்கா

— வந்தைவேள் —

எரியூட்டுங்கள்!

இராவணனைக் குறிக்கும் கேலி உருவததையும், அவரது திருக்குமரன் மேகநாதனைக் குறிக்கும் கேலி உருவத்தையும், தம்பி கும்பகர்ணனைக் குறிக்கும் கேலி உருவத்தையும் எரியூட்டிப் பொசுக்கி மகிழ்ந்தார்கள் டில்லியில்! இதற்குப் பெயர் "இராம லீலா"!

டில்லியில் இராம லீலா மைதானத்தில் ஆண்டாண்டு தோறும் நடைபெறும், திருவிழா அது!

இவ்வாண்டு அத்திருவிழாவை, இலட்சோப இலட்ச மக்களுக்கிடையே, இந்தியப்பிரதமர், ஆசியஜோதி, அகிலஉலக சமாதானத் தூதர் திரு. நெஹ்ரு அவர்கள் கண்டு ஆனந்தித்தார்கள்.

இவ்வாண்டு 'இராம லீலா'வின் விசேஷம் என்ன வென்றால், அக்காட்சியை, இந்தோனீஷிய உதவி ஜனாதிபதி, டாக்டர். முகம்மத் ஹட்டா அவர்களும் உடனிருந்து கண்டு களித்தார்!

டாக்டர். ஹட்டா என்ன கண்டிருப்பார்! ஏதோ, பெருத்த செலவில் ஏற்பாடான வாணவேடிக்கை! மக்கள் ஆரவாரம்!...அம்மம்மா!...சொல்லில் அடங்கா! எழுத்தில் அடங்கா!......... என்றுதான் பிரமித்துப்போயிருப்பார்!

ஆனால் அவர் காண்பாரா-அவ்வடவர் மாட்டுப் பொங்கும் மகிழ்ச்சியில், தென்னவரது உள்ளக்குமுறல் துடித்து நிற்கிறதென்பதை!

பாவம்! அவர் இராமாயணம் அறிவரோ! அறியாரோ!

எப்படியாவது இராமாயணம் அறிந்திருந்தாலும், அதில் அடைந்திருக்கும் ஆரியர்—திராவிடர்ப் போரை அறிவரோ? அறியாரோ!

ஏன்? திரு. நெஹ்ரு அவர்கள் கூறியிருக்க மாட்டாரோ!

கூறுவார்!...பொதுக்கூட்டச் சொல் ஆரவாரத்திலும், தாம் கண்டு பிடிக்கும் இந்திய வரலாற்று ஏட்டிலும், கூறுவார்!

ஆனால் இராமலீலையை டாக்டர், ஹட்டாவுடனும் மற்ற அயல் நாட்டு இராஜ தந்திரிகளுடனும் கண்டு மகிழ்வார்!

என் செய்வது! அவர் வாய்ச்சொல் வீரரடி பாப்பா! நேரு வாய்ச்சொல் வீரர்!

எண்ணத்தில், பேச்சில், எழுத்தில் பகுத்தறிவு!

நடத்தையில் பச்சை "சனாதனி"!... என்று அவர் வகிக்கும் பதவியை நோக்கியாவது கூறாது விடுப்போம்.

மகா பாரதம், இராமாயணம் போன்ற நூல்கள் ஆதிகாலத்தில் 'விஷமத்துடன்' ஒரு தலைப்பட்சமாக எழுதி வைத்துக் கொள்ளப்பட்டவை!......... ஏகலைவன் வலக்கைக் கட்டை விரலை 'குரு தட்சணை'யாக, வெட்டிக்கொடுக்கும்படி கேட்டு துரோணர் பெற்றுக்கொண்டது-அடாதது! கூடாதது! தற்காலத்திற் கேலாதது! என்று அண்மையில் ஒரிஸ்ஸாவில் கூறிய அதே திரு. நெஹ்ரு அவர்கள்தான் டில்லியில் அயல் நாட்டு இராஜ விருந்தினர்களுடன் இராமலீலை கண்டு மகிழ்கிறார்!

தீவினையை நல்வினை வென்றதாம்! அதன் எடுத்துக்காட்டுதான் 'இராம லீலை'யாம்!

எது தீவினை! எது நல்வினை!

'சூத்திர'ச் சம்பூகன் தவஞ்செய்தார்!

ஆரியப் பிஞ்சொன்று செத்து மடிந்ததாம்!

அதர்மம் நாட்டில் தாண்டவ மாடியதாம்!

என்ன அதர்மம்!

சூத்திரன் தவமிருப்பதா!

முறையீடு—இராமனிடம்!

பார்த்தான் இராமன்! ஓரே அம்பு! ரொய்ய்ய்......டப்! ஆ! என்ன வீரம்! என்ன ஆச்சர்யம்! 'சூத்திர'ச் சம்பூகன் பிணம்! ஆரியக்குஞ்சு உயிர் பெற்று எழுந்தது! தர்மம் தழைத்ததாம்!

இஃதென்னையா நல்வினை!

தவ மிருத்தல் ஆரியனுக் கென்ன 'காப்பி ரைட்டா'!

கூறுங்கள் இப்போது! எது தீவினை! எது நல்வினை! சூத்திரச் சம்பூகன் இராமனால் கொல்லப்பட்டது தீவினையாயின் ஏன் எரியூட்டப்படாது இராமன் கேலி உருவத்தை? இங்கே 'இராவண லீலா' கொண்டாடுவது குற்றமா!

தெற்கே 'இராதா-இராமாயணம்' 'இராவண லீலா'வின் இரண்டாம் வெள்ளோட்டம்!

அப்போது முதல் வெள்ளோட்டம் எது என்று கேட்கிறீர்களா?

அன்று மலையாளத்தில் "நாராயண குரு" கூட்டத்தில், பண்டித மதன் மோகன மாளவியா, இராமனுக்கு ஜே! என்று கத்தியபோது ஈழ மக்கள் இராவணனுக்கு ஜே! என்று எதிர் கோஷம் போட்டார்களே! அதுவே "இராவண லீலா"வின் முதல் வெள்ளோட்டம்!

"இராம லீலா"விற்கு எதிராக தெற்கே "இராவண லீலா" நடத்திக் காட்டுங் காலம் வெகு தொலைவில் இல்லை!

அப்போது திரு. நெஹ்ரு அவர்கள் அதே டாக்டர் ஹட்டாவை உடன் அழைத்து வந்து உண்மை காணச் செய்யட்டும்! இராவணன் யார் என்பதையும் அறியட்டும்!

அதற்குள், இராவணன் யார்!—என்பதை எங் நாட்டுப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிடங் கேட்டு வைக்கட்டும்:

"தென்றிசையைப் பார்க்கின்றேன்
என் சொல்வேன் என்றன்
சிந்தை யெலாம் தோள்களெலாம்
பூரிக்குதடடா!
அன்றந்த லங்கையினை ஆண்ட
மறத்தமிழன்
ஐயிரண்டு திசைமுகத்தும் தன்
புகழை வைத்தோன்!
குன்றெடுக்கும் பெருந்தோளான்!
கொடைகொடுக்கும் கையான்!
குள்ளநரிச் செயல் செய்யும்
கூட்டத்தின் கூற்றம்!
என் தமிழர் மூதாதை! என்
தமிழர் பெருமான்
இராவணன்காண்; அவன்
நாமம் இவ் வுலகம் அறியும்!

*

'வஞ்சக விபூஷணனின் அண்ணனென்று தன்னை
வையத்தார் சொல்லுமொரு
மா பழிக்கே அஞ்சும்
நெஞ்சகனை, நல்யாழின் நரம்பு
தனைத் தட்டி
நிறைய இசைச் செவியமுது
தரும் புலவன் தன்னை
வெஞ்சமரில் சாதல் வர
நேர்ந்திடினும் சூழ்ச்சி
விரும்பாத பெருந்தகையைத்
தமிழ்மறைகள் நான்கும்
சஞ்சரிக்கும் நாவானை வாழ்த்
துகின்ற தமிழர்
தமிழரென்பேன்'; மறந்தவரைச்
சழக்கரெனச் சொல்வேன்!

*

"தென்னிலங்கை யிராவணன் தன்னை
......என்ன சொல்லி யெவ்
வாறு கசப்பினும் இன்று
நானவர் ஏற்றத்தைப் பாடு
வேன்!"

●

குருட்டு 'இராம லீலை' வீழ்க!
இராவணன் அறம் ஓங்குக!

நூல்

●

புதிய எண்ணங்களை வழங்கும் புத்தகங்கள் மனித வாழ்விற்கு கிடைத்த நிகரற்ற சுவை பெட்டகங்கள்! புத்தகம் இன்றுள்ளில் பெரும் பரம்பரைக்கே ஜீவன் பெய்து வருகிறது. எழுத்தாளர்—அச்சகத்தினர் — வெளியிடுவோர்—விற்பனையாளர் இக்கரு அணிவகுப்பிற்குதொழிலாக-எழில் கலையாக நூல் பயன்படுகிறது.

வளருகின்ற உலகில் புத்தகத்தின் ஆதிக்கம் மிகமிகப்பெரிது! அதன் அந்த நாளைய வரலாற்றில்தான் எத்தனை விசித்திரங்கள்...!

நூல் வெளியீடு இன்று பணம் குவிக்கும் துறையாக விளங்குகிறது ஆனால் துவக்கத்தில் தர்ம சிந்தையாக சிலர் நூலை அச்சிட்டார்களே தவிர லாப நோக்கோடு அல்ல.

1577-ல் தமிழில் முதல் புத்தகம் அச்சிடப்பட்டது. கிருஸ்துவ வேதஉபதேசம் என்ற தலைப்பில்போர்த்துகீஸிய பாதிரிகள் இதனை வெளியிட்டனர்.

1746-ல் பைபிளின் முதல் தெலுங்கு மொழிபெயர்ப்பு ஜெர்மனியில் பிரசுரமாயிற்று. மலையாள கன்னி வெளியீட்டின் தலைப்பு மலபார் மருந்துகள் என்பது. இது 1686-ல் ஹோலந்தில் அச்சிடப்பட்டது. கன்னடத்தின் பைபிள் மொழிபெயர்ப்பை இதே வேளையில கிருத்துவ பாதிரிகள் சிலர் வெளியிட்டனர்.

மத பக்தர்களின் ஆதிக்கத்திலே சிக்கிக் கிடந்த புத்தக வெளியீடு மெல்ல மெல்ல இலக்கிய ரசிகர்களின் கரங்களில் நழுவி விழுந்தது. பணம் படைத்த சீமான்கள் எழுத்தாளனின் சிருஷ்டியை வாசித்து மகிழ்ந்து அதனை அச்சிட்டு வந்தனர். அப்போதெல்லாம் நூல் வெளியீடு லாபநஷ்ட கணக்கு பார்க்கும் தொழிலாக வளரவில்லை.

பாட புத்தகங்களை வெளியிடுவோர் புத்தக விற்பனையை வளர்த்தனர். பெரிய அளவில் வாணிபமாக இது உருமாறியது. 1860-ல் கிறித்துவ இலக்கிய கழகத்தினரால் முதல் தமிழ் பாட புத்தகம் வெளியிடப்பட்டது.

ராமாயணம், மகாபாரதம். பஞ்சாங்க ஏடுகள் ஆகியவை இந்த வேளையில் அச்சாகி பவனி வந்தன. ஓலைச் சுவடிகளின் மகத்துவம் படிப்படியாக தேய்ந்தது. தென்னகத்தில் 7·7 கோடி மக்கள் திராவிட மொழிகளை பேசுகிறார்கள். இவர்களில் இரண்டு கோடி மக்கள் படித்தவர்கள், ஐந்நூறு வெளியீட்டகங்கள் இந்த மக்களுக்காக ஏடுகளை அச்சிடுகின்றன, சராசரி 65000 மக்களுக்கு ஒரு விற்பனை நிலையமே இருக்கிறது.

டென்மார்க்கில் 600 புத்தக வியாபாரிகள் உள்ளனர். அங்குள்ள 7500 மக்களுக்கு ஒரு விற்பனையாளன் இருக்கிறான். வாழ்வின் வரப்பிரசாதமான ஏடுகளை வாங்கி வாசிப்போர் நம்மில் மிகமிக குறைவு. படிப்பது கெட்ட வழக்கம் என்று நினைப்போர் உலவும் 'மண்' இது! இங்கே இந்த இருண்ட நிலை வியப்பிற்குரியதல்ல.

இன்னும் ஒன்று.

எழுத்தாளர்கள் புத்தக நிலையத்தினருக்கு காற்றை குடித்துவாழும் பிறவிகளாக காட்சியளிக்கிறார்கள்! ஆசிரியர்களுக்கு 5 சதமானம் முதல் 25 சதமானவரை இவர்கள் தாராளமாக ராயல்டி வழங்குகிறார்கள். புகழ் பெற்ற எழுத்து வல்லோர்களுக்கு 25 சதமானத்திற்குமேல் இல்லவே இல்லை!

நூலின் விலை நிர்ணயம் கவனத்திற்குரிய கட்டம். பெரும்பான்மையான வெளியீட்டகங்கள் அதிக விலையுள்ள ஏடுகளையே அச்சிட விரும்புகின்றன. புத்தகத் தொழிலில் 'விளம்பரம்' என்று ஒன்று இருப்பதாக நம்மில் மிகப் பலருக்கு தெரியவே தெரியாது! மேல் நாடுகளில் பதிப்பாளர்கள் தங்களுடைய வெளியீடுகளின்விளம்பரத்திற்காக பொருளை வாரியிறைக்கிறார்கள்.

1954-ல் தமிழ், தெலுங்கு, மலையாளம் கன்னடம் ஆகிய மொழிகளில் முறையே 700, 420, 550, 450 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. வாசிப்போரின் தொகை வளர்ந்தால் புத்தகத்தொழில் இன்னும் சிறப்புபெறும். மற்றபகுதிகளைவிட தமிழகம் புத்தகத்துறையை பொறுத்த மட்டில் பாதாளத்திலே விழுந்து கிடக்கிறது. அரசியல் சுழலில் பதிப்பகங்களும் சிக்கிக்கொள்கின்றன. பொதுப்படையாக எல்லா ஏடுகளையும் வெளியிடும் செல்வாக்கு பெற்ற பதிப்பகம் தமிழகத்தில் இல்லவே இல்லை! எழுத்தாளர்களின் ஒத்துழைப்போடு இலக்கிய கழகம் நிறுவப்படவேண்டும். வருவாயை எல்லோரும் பகிர்ந்து கொள்ளலாம். தனிப்பட்ட பதிப்பகங்களிடமுள்ள தொடர்பு இதனால் பாதிக்கப்படாது மலையாளத்தில் 250 எழுத்தாளர்கள் ஒன்றாக சேர்ந்து கோட்டயத்தில் 'இலக்கிய கழகம்' நிறுவியுள்ளனர். வியத்தகு முறையில் அது வளர்ந்து வருகிறது. 250 எழுத்தாளர்களும் ஒரே இலட்சியம் கொண்டவர்களல்ல—காங்கிரஸ் வாதிகள், பொதுவுடமையினர், அரசாங்க அதிகாரிகள், சமதர்மிகள், கட்சிசார்பற்ற பேராசிரியர்கள் கவிஞர்கள், சரிதவல்லுனர்கள் இப்படி எண்ணற்ற ரகத்தினரின் 'கூட்டுக் கழகம்' பிரமாண்டமான தன்மையில் இயங்கி வருகிறது.

சிறு கதை— நவீனம்—சரிதம்—பயணக் குறிப்புகள்—புராணம்—தத்துவ விசாரணை—ஜோதிடம்—கவிதை ஆகிய இலக்கியத்தின் பல்வேறு பகுதிகளின் நூற்றுக் கணக்கான ஏடுகள் திங்கள் தோறும் வெளியாகின்றன, குறிப்பிட்ட தவணைக்குள் எழுத்தாளர்கள் தங்களது படைப்புகளை கழகத்திற்கு அனுப்புவார்கள். மாத ஊதியம்போல நல்ல தொகை வருகிறது. வெளியார் பதிப்பகங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் எழுத எந்தவித தடையுமில்லை.

பொருள் வசதி படைத்த சிலரைத் தவிர பெரும்பான்மையினர் புத்தக வெளியீட்டில் தோல்வி காண்பது தமிழகத்தில் வழக்கமாகி விட்டது. இது தவிர்க்கப்பட வேண்டும். புத்தகங்கள் புதிய எண்ணங்களின் தூதுவர்கள். வருங்கால பரம்பரையினருக்கு இன்றைய சந்ததிகள் வைத்துப் போகும் சொத்து. கஞ்சனின் மனம்போல வரட்சியாக காட்சியளிக்க வேண்டாம்!

புதுவெள்ளம்போல நூலறிவு பொங்கிப் புரள அந்தக் கலையை எழில் செய்வோம்.

—தொகுப்பு: சேரன் தம்பி

திராவிடன்

சென்னை : 4—11—55 : வெள்ளி

வெளியேற்றப் படலம்!

●

திருச்சி ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழா வில் சென்னை மாநில கல்வி அமைச்சர். சுப்ரமண்யம் அவர்கள் தமிழில் சொற்பொழிவாற்றினாராம். கல்வி அமைச்சரின் அரசியல் கொள்கைகளிலே நமக்கு வேறுபாடுகளிருப்பினும் அவர் தமிழ் மொழிக்கு தமிழகத்தில் அதற்குரிய இடத்தை அளித்தாக வேண்டும் என்ற பிரச்னையில் ஓரளவு தன்மானமுடன் நடந்து வருவது குறித்து மகிழ்ச்சியடைகிறோம், பாராட்டவும் செய்கிறோம். நாம் மட்டுமல்ல, அந்தந்த வட்டார மொழி குறிப் பிட்ட அந்தந்த மாநிலங்களில் முதலிடம் பெறவேண்டு மென்ற எண்ணங் கொண்ட அனைவருமே கல்வி அமைச்சரின் ஆர்வத்தைப் பாராட்டத்தான் செய்வர்.

ஆனால் அக்கல்லூரியிலுள்ள மலையாள மாணவர்கள், ஏறத் தாழ நூறு பேர் வரை கல்வி அமைச்சர் தமிழில் பேசியதை எதிர்க் கும் வகையில் மண்டபத்தைவிட்டு வெளியேறி விட்டனராம்!

தமிழகத்தில் வசிக்கும் மலையாள மக்களுக்குத் தமிழ் மொழி புரியாது என்று எவரும் துணிந்து கூறமுடியாது. வடநாட்டுக் காரர்களில் பலர் தட்டுத்தடுமாறி தமிழ் பேசுகிறார்களென்றால், தமிழகத்திற்கு அடுத்த பகுதியான மலையாள மக்களுக்கு—தமிழ் நாட்டிலேயே இரண்டறக் கலந்து வாழும் மலையாள மாணவர்களுக் குத் தமிழ் புரியாது என்று எவரும் கூறிட இயலாது.

இவ்வாறிருக்க, ஜோசப் கல்லூரியிலுள்ள மலையாள மாணவர் கள் அமைச்சரின் தமிழ் சொற்பொழிவினை எதிர்த்து வெளியேறுவ தென்பது விவேகமற்ற செய்கை என்பது மட்டுமல்லாமல் மலையாள மக்களிடம் தமிழர்கள் காட்டும் உண்மையான நேச மனப்பான் மைக்கு துரோகம் செய்வதுமாகும்.

மலையாளம் உள்ளிட்ட தென்னகத்துக்கு அடிக்கடி வருகை தரும் இந்தியப்பேரரசின் முதல்வரிலிருந்து மற்றஅமைச்சர்கள்வரை சில சமயங்களில் இந்தி மொழியில் பேசுகின்றனர், அதனைத் தட் டிக் கேட்க, வெளியேற்றப் படலத்தில் ஈடுபட்ட மலையாள மாண வர்களுக்கு உணர்ச்சி யிருந்திருப்பின் அதில் அர்த்தமிருக்கமுடியும். அப்போதெல்லாம் வாய்மூடி மௌனிகளாகயிருந்த இம்மாணவர் கள், தமிழகத்தில், அமைச்சர்கள் தமிழில் பேசுவதை எதிர்ப்பதென் பதில் ஏதோ மூடு மந்திரம் இருக்கத்தான் செய்யும் என்று கருது கிறோம். இல்லையெனில் அம்மலையாள மாணவர்களுக்கு தமிழ் மொழியின்மீது இவ்வளவு மட்டரகமான வெறுப்பு தோன்ற வேண்டிய அவசியம் என்ன யிருக்கிறது?

வெளியேற்றப் படலத்தில் ஈடுபட்ட மலையாள மாணவர்களின் போக்கினைக் குறித்து அரசியல் வட்டாரங்களில் பல காரணங்கள் கூறப்படுகின்றன. ஆனால் அவைகளில் எந்த அளவுக்கு உண்மை யிருக்குமோ, அது நாளாவட்டத்தில்தான் தெரியும்.

திருவாங்கூர் கொச்சியிலுள்ள—தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற் றின்கரை, சித்தூர் முதலிய தமிழ்ப்பகுதிகள் தமிழகத்துடன் சேர வேண்டும் என்பதற்காக சென்னை சர்க்கார், மாற்றுக் கட்சிகளின் வற்புறுத்தலின் மீது எடுத்துக் கொண்டிருக்கும் சாதாரண முயற்சி யைக் கண்டுதான் இவ்வித வெளியேற்றப் படலத்தில் ஈடுபட்டிருப் பதாகக் கூறப்படுகிறது.

இது உண்மையானால் திருச்சி ஜோசப் கல்லூரி மலையாள மாணவர்களின் போக்கு, தமிழர்கள் தங்கள் உரிமையை மேலும் வற்புறுத்தவும்—அதில் வெற்றி பெறவுமான சூழ்நிலையைத்தான் உருவாக்குமே யல்லாது, அப்பிரச்னையைத் தமிழர்கள் கைநழுவ விடுவர் என்று எண்ணுவது அறிவுடைமையாகாது, இதனை ஜோசப் கல்லூரி மலையாள மாணவர்கள் இனியாவது புரிந்துகொள்ள வேண்டுகிறோம்.

கேரளத்தைத் தங்களின் லாபவேட்டைக் காடாக ஆக்கி, அதே சமயத்தில் பிற மாநிலங்களில் மலையாள மக்களை இறக்குமதி செய்து அந்த மக்களோடு மோதவிடச் செய்துவரும் வடநாட்டு ஆதிக்கத் தைத் தகர்த்தெறிய மலையாள மாணவர்கள் முனைவார்களேயானால் அது மான உணர்ச்சியுள்ள செயலாகும்.

அதைவிடுத்து டில்லி தேவதைகளின் பிரித்தாளும் சூழ்ச்சியை உணர்ந்துகொள்ளாமல், தங்களுக்கு இதுவரை பல்வகையாலும் உதவிசெய்து வந்த—சகோதர உணர்ச்சிகொண்ட—தமிழர்களிடம் வீண் வம்புக்கு நிற்பதானது, வெளியேற்றப்படலம் நடத்திய மலை யாள மாணவர்களின் எண்ணத்தை நிறைவேற்று தென்பதுடன் டில்லி ஏதிக்கத்தின் பிடிப்பை மேலும் வலுப்பெறச் செய்யும் எ பதை அம்மாணவர்கள் மட்டுமல்லாமல் மலையாள மக்கள் அனை வருமே உணர வேண்டுகிறோம்.

அன்று "வந்தார்க்கு இலையும், வருவாருக்கு உலையும்" வைத்து உபசரித்து இன்று தன் சொந்தநாட்டிலே சுதந்திரமற்றும் இலங்கை மலேயா, போன்ற நாடுகளில் இன்னல்களுக்கு ஆளாகி நாடோடிகள் என்று ஏசப்பட்டும் வாழ்வுக்கு ஊசலாடிவரும் தமிழர்களிடம் தமிழ் மொழியிடம், அம்மொழியை அஸ்திவாரமாகக் கொண்டவ களும், இனத்தால் ஒன்றுபட்டவர்களுமான கேரள நாட்டு மாண வர்கள் காட்டும் மனப்பான்மை வெந்த புண்ணில் வேல்கொண்(குத்துவதற்கே ஒப்பாகும்.

தென்னாட்டின் ஒரு பகுதியினரான கேரளப் பகுதி மக்களின் நியாயமான உரிமைக்காகவும் தென்னாட்டினர் அனைவரும் இ அடிப்படையில்—முக்கிய பிரச்னைகளில் ஒன்றுபட்டு வாழவு திராவிட முன்னேற்றக் கழகம் தனது மனப்பூர்வமான ஒத்துழை பைத் தர காத்திருக்கிறது. அதற்காக தமிழகத்தின் உரிமை யில் கையை வைக்க எவரையும் அனுமதிக்காது என்பதை திருச்சி ஜோசப் கல்லூரியில் வெளியேற்றப் படலம் நடத்திய கேரள மாணவர்களைப் போன்றவர்களுக்கு மட்டுமல்லாமல் கேரள ஆட்சிப்பீடத் தலைவர்களுக்கும் ஏனையோருக்கும் திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே, திருச்சி ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற அர்த்த மற்ற காரியங்கள் இனி தமிழகத்தில் நடைபெறாதவாறு கேரள நாட்டுத் தலைவர்களும், வெளியேற்றப் படலத்தை நடத்தி வைத்த சூத்திரதாரிகளும் மனவளம் பெறுவார்களென்று நம்புகிறோம்,

●

'கோயபல்ஸ்' பரம்பரையினருக்கு பம்பாய் தி. மு. கழக ஆப்பு!

●

'தினமணி' சென்னை 30–10–'55 வெளியூர் 31–10–'55 சு. மி, சென்னை 31–10–55 வெளியூர் நவ-1, நாளைய இதழில் "பம்பாய தி. மு. க. தோழர்கள் காங்கிரசில் சேர்ந்தனர்" என்ற தலைப்பில் பம்பாயிலுள்ள தி. மு. க, தோழர் கள், அனுதாபிகள் 4000 பேர் காங்கிரசில் சேர்ந்து நாட்டின் பணிக்கு சேவை செய்வதாக கூட்டத்தில் சபதம் செய்தார்கள் 'என்று வெளியாகியுள்ளசெய்தி முற் றிலும் ஆதாரமற்ற பொய்ச்செய்தியாகும். அப்போதுக் கூட்டத்தில் 2000க்கு குறைந்தவர்களே கூடியிருந்தனர். பம்பாயில் தி. மு, கழக வளர்ச்சி கண்டு பொச்சிரிப்பு கொண்டோரின் பொறுப்பற்ற செயலினாலேயே அச்செய்தி வெளி யாகியிருக்கும் எனக் கருதவதோடு, அதனைப் பம்பாய் தி. மு. க. தலைமை நிலைய சார்பில் வன்மையாகக் கண்டிக்கிறோம், இத்தகைய ஈனச் செயலை மேற்கொண்டு கட்சியை வளர்க்க எண்ணுவது கண்டு, பம்பாய்வாழ் பொதுமக்கள் கண்டித்துப் பேசுகின்றனர் பம்பாய் தி. மு. கழகக் கிளைகளிலிருந்து ஒரு உறுப்பினர்கூட விலகவில்லை என்பதை இதன் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, இத்தகைய இழி செயல் புரியும் ஏடுகளையும்—கட்சிகளையும் பொதுமக்கள் வெறுத்தொதுக்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்ளுகின்றோம். என பம்பாய் தி. மு கழகப் பொதுச் செயலாளர் சார்பில் தோழர் த. மு பொற்கோ அறிவிக்கிறார்.

நடக்க இருப்பவை

அறிஞர் அண்ணா

அவர்களின்

சொற்பொழிவுகள்

○

திருவொற்றியூர்

5–11–55 சனி காலை 8–30 மணிக்கு திருவொற்றியூர் வடக்கு மாசி வீதி 60-வது எண், திருமண மண்டபத்தில் திருவொற்றியூர் தி. மு. கழகப் பொரு ளாளர் டி. கே. பழனிச்சாமிக்கும், தோழியர் புஷ்பத்திற்கும், தோழர் ஆர். நமச்சிவாயம் தலைமையில் திரு மணம் நடைபெறும். அறிஞர் அண்ணா சொற்பொழிவாற்றுவார்,

நிதி அளிப்புக் கூட்டம்

அன்று மாலை 5–30 மணிக்கு திரு வொற்றியூர் தி. மு. கழக சார்பில் மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்புக் கூட்டம் சன்னதித் தெருவில் நடை பெறும். அறிஞர் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

விம்கோ தொழிலாளர்கள் உள்ளிட்ட மற்றும் சில தொழில் நிறுவனங்களின் சார்பிலும் நிதி அளிக்கப்படும்.

பி. அண். ஸி, மில் தொழிலாள

6—11—55 மாலை 6–மணிக்கு சூளை கான்ரன்ஸ்மித்நகரில் தி.மு. கழகமாநி மாநாட்டுக்கு, மேற்படி ஆலைத் தொ ளாளர்கள் சார்பில் நிதி அளிப்புக் கூ டம் தோழர். டி. எஸ். சண்முகம் தலை மையில் நடைபெறும். அறிஞர் அண்ண அவர்கள் பேசுவார்.

சுந்தரபாண்டியம்

தி. மு. கழக சார்பில் 6—11—5 ஞாயிறு மாலை 6-மணிக்கு கடைவீதிக்கு அடுத்த திடலில் பொதுக்கூட்ட நடைபெறும். தோழர் என். வி. நட ராசன் பேசுவார்,

இலங்கை

தி. மு. கழகக் கொள்ளுப்பட்டிக் கிளை யின் ஆதரவில் 6–11–55 ஞாயிறு மாலை 4-மணிக்கு கொள்ளுப்பட்டி ஆரம்ப பள்ளி மண்டபத்தில் திபாவளி எதிர் புக் கூட்டம் நடைபெறும். மா. யோ தேவராசன் தலைமையில் கழகமுன்னண வீரர்கள் பேசுவர்.

புதுவை

கடலூர் ஓ. டி. 2-வது வார்(தி. மு. க. செயலாளர் எஸ், அஜீஸ்— தோழியர் கைருன்னிசா பேகம் ஆ யோர் திருமணம் 7—11—55 திங்கள் காலை 5- மணிக்கு புதுவை தென் னண்டை புல்லார் வீதி 9–வது இல்லத் தில் நடைபெறும்.

'பம்பாய் சரக்கு பல்லை யிளிக்கிறது!'

முதல் பக்கத் தொடர்ச்சி

யின் பெயராலோ, சின்னத்தையோ ஜாடையாகக் காட்டிக்கூட ஆதரவு தேடவில்லை. இன்னும் சொல்லப் போனால் கட்சியின் சொற்பொழி வாளர்கள், தேர்தல் கூட்டத்துக்குக் கட்டாயம் போகவேண்டு மென்றும் நிர்பந்திக்கப்படவில்லை.

ஆனால் காங்கிரசோ தனதுமுழு சக்தியையும் மற்ற வித்தைகளையும் பயன்படுத்தி யிருக்கிறது போதாக்குறைக்கு எல்லோருக்கும் பொதுவான நிலையில் அமர்ந்துள்ள முதலமைச்சர் காமராசர் கூட தனது ஜபர்தஸ்தைப் பிரயோகித்திருக்கிறார்.

இவ்வளவிருந்தும், எங்கள் கட்சித் தோழர்களில் நூற்றுக்கு 90 பேர் வெற்றிபெற்றிருக்கின்றனர். அதுவும் காங்கிரசின் பணபலத்தை முறியடித்து. இன்னும் வேண்டுமானால் எங்கள் கட்சித் தோழர்கள் எத்தனைபேர் நின்றனர். அவர்களில் வெற்றிபெற்றவர்கள் எத்தனைபேர்-என்ற விவரங்களைச் சொல்லட்டுமா?

சு. மி. பா:— நான் ஏதோ வேடிக்கைக்காக உன்னிடம் பேசினால் நீ விவகாரமாக அல்லவோ வளர்க்கிறாய் தம்பி...

தி. செ:—சு. மி. பாட்டி, அப்படியானால் பம்பாயில் ஏதோ ஒரு கூட்டத்தில், தி. மு. கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஒருவர் பேசியதாகவும், அந்தப் பேச்சைக் கேட்டு, அக் கூட்டத்திலிருந்த 4000 தி. மு. க. தோழர்கள் உடனே காங்கிரசில் சேர்ந்து விட்டதாகவும், தலைப்பு கொடுத்து 31—10—55ந் தேதியன்று தப்பட்டை யடித்திருக்கிறாயே, அதுவும் வேடிக்கையான செய்திதானா அல்லது விவகாரம் உடையதா?

சு. மி. பா — பம்பாயிலிருந்து எனது நிருபர் அனுப்பிய செய்தியை வெளியிட்டேன். மற்றவையெல்லாம் எனக்கு எப்படி தெரியும் தம்பி ?

தி. செ—அதில்ல பாட்டி, 4000 பேர் உடனடியாக அதுவும் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஒருவரின் பேச்சைக் கேட்டு, உடனே காங்கிரசில் சேர்ந்து விட்டார்கள் என்று செய்தி அனுப்பியவருக்குத்தான் விவேகம் இல்லாவிட்டாலும் பத்திரிகைத் தொழிலில் பாட்டி நிலையடைந்த உனக்குக் கூடவா புத்தி கெட்டு விட்டது. சொல்வார் சொன்னாலும் கேட்பாருக்கு மதி வேண்டாமா? ஏன், இதனை ஆரதீர கேட்டு உண்மை யறிந்து வெளியிட்டால் குடி முழுகிப் போய்விடுமா? உங்களைப்போன்றவர்களின் இந்த அவசரப் புத்தியிலிருந்து தெரிய வருவதெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் அடியோடு தொலைந்து விட வேண்டும் என்ற அபார ஆசை உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை உங்களைப் பிடித்து படாத பாடுபடுத்துகிற தென்பதுதானே.

சு. மி. பா—சரி, நான் வெளியிட்டது தவறு என்றே வைத்துக்கொள். பம்பாய் விஷயத்தின் உண்மைதான் என்ன ?

தி. செ—இந்தப் புத்தி. செய்தியை வெளியிடுவதற்கு முன்பல்லவோ யிருக்க வேண்டும். சரி சொல்லுகிறேன் கேளுங்கள்.

தி. மு. கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்ட கோவில்பட்டி தோழர், தமிழகத்தில் சில இடங்களில் தேசிய முலாம் பூசி தனது "சரக்கை" விற்க முனைந்தார். இங்கே சீந்துவாரில்லை. தேசிய முகாமிகளும் இந்த சரக்கின் தரத்தில் ஏமாந்து கைநழுவ விட்டனராம்—பம்பாய்க்குச் சென்று ஒருகை பார்க்கலாம் என்று வெளியேற்றப்பட்ட அந்தத் தோழர் திட்டமிட்டு அதுபோலவே பம்பாயில் ஒரு கூட்டத்தில் தனது மூட்டையை அவிழ்த்தாராம்!

தாயகத்திலிருந்து வரும் இந்த நபரின் நடவடிக்கை என்ன என்பது பற்றி அறிய தி. மு. கழகத் தோழர்களும், பொதுவாகத் தமிழர்களும் வந்திருந்தனராம். ஆனால் அந்த நபரின் அபஸ்வரத்தைக் கேட்டு,—(அதாவது நீங்களெல்லாம் தி. மு. கழகத்திலிருந்து வெளியேறிவிட வேண்டு மென்று உரக்கக் கத்தினாராம்! இதைக் கேட்ட கூட்டத்தினர்) கைகொட்டி சிரித்தனராம். இதுதான் நடைபெற்ற உண்மைச் சம்பவம். இதனை உங்கள் நிருபர் கயிறு திரித்து விட்டார்.

ஏன் பாட்டி, இந்தக் காலத்திலேயே இவ்வளவு பச்சைப் புளுகை தப்பட்டை அடிக்றீர்களே—அந்தக் காலத்தில்-அதுதான் தட்டிக்கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன் என்ற நிலையிலிருந்த அந்தக்காலத்தில்—பரமசிவன் பார்வதிக்குச் சொல்லி, பார்வதி நந்திக்குக் கூற, நந்தி நாரதரிடம் தெரிவிக்க, திரிலோக சஞ்சாரியான நாரதர் பூலோகத்தில் (ஆகாய விமானமின்றியே) குதிக்க, அப்படி குதித்தவர் எதிர்பாரா வகையில் மயிலை அக்ரகாரத்திலேயே குதித்திருக்கக் கண்ட அப் பார்பனச்சேரி மக்கள் நாரதரை சூழ்ந்து கொண்டு, நீங்கள் யார், என்ன செய்தி என்று கடாவ, பரமசிவன் பார்வதியிடம் அறிவித்த அந்தத் தாரக மந்திரத்தை-இரகசியத்தை தேவாள் அம்சமாகிய பிராம்மணோத்தமர்களிடம் கூறினார்...... என்று கதை அளக்கப்பட்டிருக்கிறதே புராணங்களில், அவைகள் எவ்வளவு கடைந்தெடுத்த "டூப்" களாயிருக்கும்?

சு. மி. பா—அடேயப்பா, இந்த சு. ம. காரன்களிடம் வாயைக் கொடுத்து வெல்ல முடியாதுடா அப்பா ?

தி.செ.—பாட்டி, சொன்னாலும் ஒரு உண்மையை நன்றாகச் சொல்லிவிட்டீர்கள். சு. ம. காரன் சொல்வதும் அதுதான். வெறும் வாய்ச்சவடால் மட்டும் போதாது அத்துடன் விவேகமும் வேண்டும் என்றுதான் எங்கள் கட்சி சொல்லுகிறது. ஆனால் உம்மை போன்றவாளுக்கு அது தான் பிடிப்பதில்லை—அடிப்படையிலேயே கோளாறு — என்ன செய்வது ?

சு. மி. பா.:—சரி போடா போக்கிரிப் பயலே, ஏதோ பம்பாய் செய்தி தவறு வந்து விட்டதாம், அதற்காக எங்கள் அடிப்படையையே குறை கூறுகிறாயே !

தி. செ. :—பாட்டி, எங்கள் தி. மு. க. தோழர்கள் இருக்கிறார்களே.........

சு. மி. பா. :—ஆமா—இல்லாம செத்தா போயிட்டாங்க.

தி. செ. :—பார்த்தீர்களா பாட்டியாகிய உங்களுக்கே எவ்வளவு கோபம் வருது. சரி தான் இப்போ நல்லா புரிஞ்சு போச்சு, நம்ம குல்லுகபட்டர், பாரதரத்ன, சக்ரவர்த்தி ராஜாஜிக்குக் கூட கோபம் ஏன் அதிகம் வருகிறதென்று......

சு. மி. பா—தம்பி, மற்றவா பேச்செல்லாம் என்னிடம் வேண்டாம். நீ என்ன சொல்ல எண்ணுகிறாயோ சொல்லி விட்டுப்போ—நான் வாயைத் திறக்கப்போறதேயில்ல!

தி. செ—இதற்கா பாட்டி இத்தனை பெரிய சத்தியாக்கிரகம்—செச்சே அதெல்லாம் வேண்டாம்!

இதோ பாருங்க — பம்பாய்க் கூட்டத்திலே, யார் பேச்சோ கேட்டு உடனே மனம்மாறி 4000 தி. மு. க. தோழர்கள் காங்கிரசில் சேர்ந்து விட்டார்கள் என்று மூட்டை அளக்கப் புறப்பட்ட உம்முடைய "அபார திறமை" யிலிருந்து தி. மு. கழகம் பம்பாயில் பெற்றுள்ள செல்வாக்கு புரிகிறதல்லவா ?............இன்னுங்க பாட்டி சும்மா யிருக்கிறீர்கள் ! அதெப்படி என்று கேளுங்க......

சு. மி. பா:— (சிரித்துக் கொண்டே) அடா அடா அடா என் உயிரை வாங்கிறியே—அதெப்படி சொல்லு?

தி. செ:—சாதாரண ஒரு கூட்டத்திலேயே 4000 தி. மு. கழகத் தோழர்கள், காங்கிரசில் சேர்ந்து விடுகிறோம் என்று சொல்லும் அளவுக்கு இருந்தால், பம்பாயில் தி. மு. கழகத் தோழர்கள் எந்த எண்ணிக்கையில் இருக்கவேண்டும், யோசித்துப்பார்; குறைந்தது ஐம்பதாயிரம் பேராகிலும் பம்பாய் நகரத்தில் தி. மு. கழகத்தவர்களாகயிருந்தால்தானே இப்படி ஒரு கூட்டத்தில் 4000 போ வர முடியும்?

எனவே தி. மு. கழகக் கொள்கைக்கு பம்பாய் போன்ற இடங்களிலும் இவ்வளவு செல்வாக்கிருக்கிறதென்று உன் கூற்றிலிருந்தே தெறிகிறதல்லவா?

சு. மி. பா:—அட ஏதோ உங்களைக் கிண்டல் செய்ய வேடிக்கைக்காக அவ்வாறு தலைப்பு கொடுத்தேன் — இதற்கா மூச்சு பிடித்துக்கொண்டு பேசுகிறாய்?

தி. செ:— யார்கிட்ட பாட்டி கதை அளக்கிறீர்! பொதுவாக தென்னாட்டு அரசியல் பார்ப்பனர்களிடம் ஒரு புத்தி நீண்ட காலமாகயிருந்து வருவதாக விஷயம் அறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

காங்கிரஸ் லகானைப் பார்ப்பனத் தலைவர்கள் கைபற்றியிருந்து பல குறைகள் காணப்பட்டு பார்ப்பனரல்லாதகாங்கிரஸ்காரர்களால் எடுத்துக் கூறப்பட்டாலும், அந்த பார்ப்பனரல்லாத காங்கிரஸ்காரர்களை மட்டந் தட்ட பார்ப்ன காங்கிரஸ் பத்திரிகைகள் ஒன்று சேர்ந்து விடுமாம். சில சமயங்களில் மற்ற கட்சியிலுள்ள பார்ப்பனரல்லாத தலைவர்களைக் கூட புகழுமாம் !

அடுத்து, காங்கிரஸ் ஆதிக்கம் பார்ப்பனத் தலைவர்களிடமிருந்து பறிபோய்விட்டால்முன்பு நாலாந்தர ஆட்கள், மட்டரக பேர்வழிகள் என்றெல்லாம் பார்ப்பனப் பத்திரிகைகளால் தூற்றப்பட்ட பார்ப்பனரல்லாத காங்கிரஸ் தலைவர்களைப் புகழ்ந்து அவர்கள் கையிலாவது அந்த லகான் இருக்கட்டும் என்று தூபம் போடுமாம் ! அந்த சமயத்தில் மாற்றுக் கட்சியிலுள்ள தலைவர்களையும், மாற்றுக் கட்சிகளையும் முன்பு புகழ்ந்ததை அறவே மறந்து கண்டபடி தாக்குமாம் !

அதாவது—காங்கிரஸ் ஸ்தாபனம் வலுப்பெற்றிருந்தால்தான் தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்குப்பாதுகாப்பு என்றும், எனவே ஆதிக்கம் எப்படியும் பிராம்மணர்களிடமே இருக்க முயற்சிப்பது—இல்லா விட்டால் காங்கிரஸ் திராவிடர்களுக்கு வேப்பிலை அடித்து குனிய வைத்து ஆதிக்கம் செலுத்துவது. அதற்காக, பார்ப்பனப் பத்திரிகைகள் செய்தித் தாள் துறையில் இருக்க வேண்டிய நீதி, நேர்மை, அறிவுடைமை அனைத்தையும் அடகு வைத்து விட்டு மாற்றுக் கட்சிகளின் செய்தியை உண்மைக்கு மாறாகவும், ஒட்டியும், வெட்டியும். பிரசுரிக்கும் பிற்போக்கினைக் கொண்டு வாழ்கின்றன.

இந்த அவலட்சணப் பாதையில் சு. மி. பாட்டியாகிய தாங்களும் உங்கள் இளம் பிராயத்தில் நடை போட்டதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் முதுமை நிறைந்த—அனுபவம் பெற்ற இந்தக் காலத்திலும் நீங்கள் அப்பாதையில் குலுக்கி நடை போடுவது நியாயந்தானா நீ சொல்லு பாட்டி!

சு. மி. பா:— (தன்னையும் மறந்து பல்லையிளித்துக் கொண்டே) அடே தம்பி, நீ பெரிய ஆளப்பா, சரி சரி நேரமாச்சு இனிமே இந்த மாதிரி அசம்பாவிதம் ஏற்படாமயிருக்க முயற்சிக்கிறேன்.

தி. செ.—சு. மி. பாட்டி நீ கூட பலே ஆள்தான்! அதுசரி பம்பாய் சரக்கு பல்லை இளிக்குதோ......

சு. மி., பா—போடா, போக்கிரிப் பயலே என்று கூறிக்கொண்டே நடையைக் கட்டினாள்— திராவிடச் செல்வனும் கழக அலுவலகத்திற்குப் புறப்பட்டான்.

●

திறந்த மடல்

முதலமைச்சர் காமராசர் அவர்களுக்கு சூத்திரசன் அறைகூவல்.

அன்புள்ள முதலமைச்சரே, வணக்கம், யான் சென்ற வாரமும் தங்களுக்கு மடல் தீட்டி யிருந்தேன். இதற்குள்ளாக மீண்டும் தங்களுக்கு மடல் வரைய வேண்டியிருக்கும் என்று யான் எண்ணியவனல்ல. எனினும் தாங்கள் 31—10—55 அன்று பெங்களூர் கூட்டமொன்றில் பேசிய பேச்சின் விவரத்தைக் கண்டு இம்மடலை வரைய முற்பட்டேன்.

பெங்களூர் கூட்டத்தில் தாங்கள் பேசுகையில் "பஞ்சம், பட்டினி, பசி, என்ற வார்த்தைகளைக் கேட்டுக்கேட்டு அலுத்துப் போய்விட்டேன், எதிர்கட்சிகாரர்கள் எவரும் இக்கொடுமைகளை ஒழிக்க உருவான யோசனைகளைச் சொல்லுவதில்லை. ஆனால் காங்கரஸ் ஆவடி மாநாட்டில் சோஷலிஸ முறையில் நாட்டில் மலிந்துள்ள வறுமையை ஒழிக்க திட்டம் தீட்டினால், அதைக் கேலி செய்யமட்டும் கிளம்புகிறார்கள். ஆவடிக்கு காவடி தூக்குகிறார்கள் என நையாண்டி செய்கிறார்கள். எனவே அவர்களின் பேச்சுகளை நம்பாதீர்கள். அடுத்தபடியாக நாடு மேலும் துண்டாக்கப்பட வேண்டும் என்பதையும் ஆதரிக்கக்கூடாது, அதனால் நாட்டின் ஒற்றுமையே கெட்டுவிடும்" என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

முதலமைச்சரே, தாங்கள் யாரை மனதில் வைத்து இவ்வாறு பேசியிருக்கிறீர்கள் என்பதை பெங்களூர் மக்கள் அறியாததல்ல.

பஞ்சம், பட்டினி, வேலையில்லாக் கொடுமைகளின் விவரத்தை கேட்க, கேட்க சகிக்க முடியவில்லை யென்றால், அதனை ஒழிக்க நடைமுறையில் செய்ய வேண்டுவது என்ன ?

தாங்கள் மனதில் எண்ணியுள்ள, அல்லது தங்களின் " எஜமானர்கள் " ஆகிய இந்தியப் பேரரசினரின் அரசியல் தத்துவார்த்தமான "இந்திய ஒற்றுமை" என்ற பல்லவியைப் பாடித்திரிந்தால் தென்னகத்தில் தலைவிரித்தாடும் வறுமை அகன்று விடுமா ?

இந்தியாவின் ஐக்கியம் கெட்டுவிடக் கூடாது என்ற அர்த்தமற்ற கூப்பாடு தானே தென்னாட்டினை இன்று இந்த இழி நிலைக்குக் கொண்டுவந்து விட்டது? இப்படிச் சொல்லுவதால், தென்னாட்டினரும்—வடநாட்டினரும் விரோதிகளாக யிருக்க வேண்டுமென்பது எங்கள் கொள்கையென சில அவசர குடுக்கைகள் கூப்பாடு போடலாம் ! அதுபோலவே உங்களின் போக்கும் இருக்காது என்று நம்புகிறேன்.

வெள்ளையர் ஆட்சியின்போது தென்னாட்டிலேயிருந்த வறுமை, கடந்த எட்டு ஆண்டுகளாக எட்டு மடங்கு வளர்ந்தும், அதே சமயத்தில் வடநாட்டில் மிகக்குறைந்தும் வந்திருக்கிறதே, இதற்குக் காரணம் என்ன ?

ஏதோ மாற்றுக் கட்சிக்காரர் என்பதற்காக யான் இவ்வாறு கூறுவதாகக் கருத வேண்டும். இந்தியப் பிரதமர் நேருபண்டிதர் அவர்களே, வடநாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து வருகிறது என அணைக்கட்டுகளையும், தொழிற்சாலைகளையும் திறந்து வைக்கும் போதெல்லாம் பூரிப்புடன் கூறுகிறாரே—கூறுவது மட்டுமல்ல, அந்த சமயங்களில் தென்னாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதையும் குறிப்பிட்டிருக்கிறார் !

எங்கள் நேரு பண்டிதர் அவ்விதம் கூறியிருக்கமாட்டார். நீ சொல்லுவதுதான் தவறு என்கிறீர்களா! அவ்விதமானால் பக்ரா-நங்கல் அணைக்கட்டுத் திட்டத்தை பார்வையிட வந்தபோது (மூன்று திங்களுக்கு முன்) நேரு பண்டிதர் பேசிய இப்பேச்சினை "இந்து" பத்திரிகையே வெளியிட்டிருக்கிறது. ஆரதீர தாங்கள் அதனைப் படித்துப்பார்த்தால் யான் கூறும் உண்மை விளங்கும்.

வெள்ளையர் காலத்திலேயே தொழில் துறையில் தென்னாடு மிகவும் தாழ்ந்த நிலையிலிருந்தது என்பதை அரசியல் விவேகம் படைத்த அனைவரும் அறிவர். தொழில் துறை நிபுணர்களும் இதை மனதார ஒப்புக் கொள்வர். வடநாட்டு முதலாளிகளோ அன்றே அயல் நாட்டு வணிகர்களிடம் கூட்டுறவு கொண்டு தொழில் துறையில் கொழுத்து வந்தனர்.

இந்நிலையில் இந்தியாவின் ஒற்றுமை என்பது உண்மையிலேயே நிலைபெற வேண்டுமானால், இந்தியப் பேரரசினர் தென்னகத்தில் அல்லவோ தொழில் துறைகளில் முக்கிய கவனம் செலுத்தியிருக்க வேண்டும்?

ஆனால் இந்தியாவின் ஒற்றுமையை வாய்க்கிழியப் பேசும் நேரு பண்டிதரோ—அல்லது நேரு பண்டிதரின் ஆட்சியோ இப்பிரச்னையில் நேர்மையாக செயலாற்றியதா? செயலாற்றும் அறிவோ அல்லது மனவளமோ அவர்களுக்கு இல்லையென்றாலும், தென்னாட்டின் முக்கிய சக்தியாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகமும், தொழில் துறைமேதைகளும் அவ்வப்போது இடித்துக் கூறிய அறிவுரைகளையாவது நேரு சர்க்கார் ஏற்றுக்கொண்டதா ?

இன்னும் சொல்லப்போனால் முதலமைச்சரான தாங்களும், மற்ற அமைச்சர்களும் தென்னாட்டு வறுமை நிலையை அடிக்கடி எடுத்துக்காட்டி மடிபிச்சை கேட்பதை போல் டெல்லி தேவதைகளிடம் வேண்டுகோள் விடுக்கிறீர்களே அதையாவது "இந்தியாவின் ஒற்றுமை" பல்லவி பாடும் பண்டிதர் ஆட்சி கண்ணெடுத்துப் பார்த்ததா என்று கேட்கிறேன்.

இந்தியாவின் ஒற்றுமை என்ற ஏமாற்றுப் படலத்தைத் தகர்த்தெறிந்து விட்டு தனி உரிமை பெற்றுள்ள, பாக்கிஸ்தானும் தென்னகத்தைவிட எல்லாவகையிலும் பின் தங்கியதாயிருந்த பர்மாவும், இலங்கையும் இன்று வளமுடன் வாழவில்லையா—அந்த நாடுகளிடம் இந்தியா எவ்வளவு மரியாதை காட்ட, உறவுகொள்ள முனைகிறது!

இந்தியாவுடன் ஒன்று பட்டிருந்த நிலையை விட இன்று அந்நாடுகள் ஓரளவு தன்மானமுடன் வாழ்கின்றன, சமயம் நேரும்போது நேரு பண்டிதரின் ஆட்சிக்கு உதவியும் புரிகின்றன.

எனவே, வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் தென்னகத்திலிருந்து ஒழிய வேண்டுமானால் நம்நாடு தனி உரிமை பெறுவதைவிட வேறு எந்த மருந்தாலும் ஒழிக்க முடியாதென்பதை சுதந்திரம் பெற்ற நாடுகள் எடுத்துக்காட்டும் படிப்பினையாகும். இது வெறும் குருட்டுப் பாடமல்ல.

ஆனால், தாங்களோ நாட்டுப் பிரிவினை இந்தியாவின் ஒற்றுமையைக் கெடுத்துவிடும் என்று கிளிப்பிள்ளை மாடலில் பேசி. ஆயாசப் படுகிறீர்கள்!

நம்முடைய ஜேபியில் உள்ள பணத்தை மற்றொருவன் அபகரிக்க, அவனை நாம் கையும் பிடியுமாகப் பிடித்து போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லும்போது நமது பொருளை அபகரித்தவன், அப்பா, மகனே இன்றைக் கிருப்பார் நாளைக்கில்லை, வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம், உலகத்தில் யாருக்கு எது சொந்தம் இந்தப் பரந்த உலகமே நம் அனைவரின் பொதுவான வீடு என்றெல்லாம் உபதேசித்தால் அவனைக் கண்டு, ஆகா அருமையான உபதேசம் நீங்கள் அவதார புருஷர், என்று அடிபணிந்து அந்தக் கயவன் கூறிய " உபதேசத்தை" பொருளைப் பறிகொடுத்தவரும் கூறிக்கொண்டு பவனி வந்தால் அதைவிட எத்தர் தன்மை வேறு யிருக்க முடியுமா?

அதுபோலவே தென்னத்தின் உரிமையைப் பறித்து வாழும் வடநாட்டு ஆதிக்கம் 'இந்திய ஒற்றுமை' என்ற உளுத்துப்போன உபதேசத்தைக் கூறித் திரிவதில் அர்த்தமுண்டு. ஆனால் அந்த உபதேசத்தை நம்பியதின் காரணமாக வறுமையில் அவதியுறும் தென்னகத்து மக்களின் ஆட்சிபீடத் தலைவராகிய தாங்களும் கூறித்திரிவதில் விவேகமிருக்க முடியுமா என்பதைச் சிந்திக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனவே, பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் இவைகளை ஒழிக்க வேண்டுமென்ற எண்ணம் உங்களுக்கு உண்மையாகவேயிருந்தால். தி. மு. கழகம் கூறும் நாட்டுப் பிரிவினைக் கொள்கையை நிறைவேற்றுவதில் தங்களின் முழு சக்தியையும் பயன்படுத்துவதுதான் சிறந்த பணியாகும்.

உங்களுக்கு இன்னும் சொல்லுவேன், இந்தியப் பிரதமர் நேரு பண்டிதரிடத்தில் உங்களுக்குள்ள செல்வாக்கைக் காட்டி, இரண்டு ஆண்டு காலத்திற்கு தென்னாட்டினை தனிநாடாக இயங்குமாறு அருள் புரியச் சொல்லுங்கள்.

அந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாகத் தங்களால் தென்னகத்திலுள்ள வறுமையை ஒழிக்க முடிகிறதா இல்லையா என்பதை நடைமுறையில் தெரிந்து கொண்டு பிறகு வேண்டுமானால் அந்த உரிமை நிரந்தரமாயிருக்க ஆவன செய்யுங்கள்.

அந்த இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக பயன் ஏதும் ஏற்படவில்லையெனில் நாட்டுப் பிரிவினை குறித்துப் பணியாற்றும் தி. மு. கழகத்தினரை நாட்டை விட்டே துரத்தி விடுங்கள்.

தென்னகத்தில் மலிந்துள்ள பஞ்சம் பட்டினி ஆகிய கொடுமைகளை ஒழிக்க எதிர்க்கட்சிக்கரார்கள் யோசனை சொல்லுவதில்லையென்கிறீர்களே, இதைவிட வேறுயோசனை என்ன சொல்லுவது?

ஆசியாவின் ஜோதிக்கு நம் நாட்டுத் தலைவாகள் என்றென்றும் அடிதண்டம் போட்டுக்கொண்டு இந்திய ஒற்றுமை என்ற வரட்டுக்கூச்சல் போடுங்கள் என்ற யோசனையை தி. மு. கழகம் கூறமுடியுமா?

எனவே உங்களுக்கு தைரியமிருந்தால், தனி உரிமைக்காகப் போராடுங்கள். இல்லையேல் அந்தக் கொள்கையைப்பற்றி அறைகுறையாகப் பேசித் திரிய வேண்டாம் என்று பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வணக்கம்

கூத்தரசன்

தனிச் சிறப்பு பெற்றது !

செல்வம் பாக்குத்தூள்

திறமையான தயாரிப்பு ! விலையோ மலிவு !

காலணாவுக்கு 2 பொட்டலங்கள்

முக்கிய நகரங்களுக்கு அநுபவமும், திறமையுமுள்ள ஏஜண்டுகள் தேவை. எழுதவும்:

M. சிவராமன்,

உரிமையாளர்: செல்வம் பாக்குத்தூள்

போஸ் பேட்டை :: குடியாத்தம். N. A.

'லெனின் கிராடில்' நமது வீரர்.

27—10—55-ம் தேதி மதுரையில் நடந்த நகராட்சிமன்ற தேர்தலில் 9-வது வார்டுக்கு திராவிட முன்னேற்றக் கழக மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து சுயேச்சையாக போட்டியிட்டார், அவரை எதிர்த்து கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ராமையா பிள்ளை போட்டி யிட்டார். வாக்கு எண்ணிக்கையில் 2055 வாக்குகள் பெற்று எஸ். முத்து அவர்கள் வெற்றி பெற்றார். இரவு 8-மணிக்கு வாக்குகள் எண்ணி முடிந்ததும் வெள்ளம்போல் திரண்டிருந்த மக்கள் கூட்டம் வெற்றி பெற்றதை ஒலிபெருக்கியின் மூலம் கேட்டதும் மகிழ்ச்சிப் பெருக்கால் ஆரவாரம் செய்தனர். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் மக்கள் ஊர்வலமாகச் சென்றனர். வீடுகளிலும், கடைகளிலும், வீட்டின் மாடிகளிலும் இருந்த மக்கள் கூட்டம் தங்கள் கையொலி மூலம் தங்கள் மகிழ்ச்சியைக் காட்டிக் கொண்டனர். வழிநெடுக மக்கள் தோழர் எஸ், முத்து அவர்களுக்கு மலர் மாலைகளையும் கைத்தறித் துண்டுகளையும் வழங்கினர்,

இந்தவார்டு மதுரையில் கம்யூனிஸ்ட் வாதிகளால் லெனின் கிராட் என்று அழைக்கப்பட்டது,

தோழர் எஸ். முத்து அவர்களை தோற்கடிப்பதற்காக கம்யூனிஸ்ட் கட்சி தன் முழு சக்தியையும் பயன்படுத்தியது. கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் பி, இராமமூர்த்தி அவர்கள் வீடு வீடாகச் சென்று ஓட்டுக் கேட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் 9-வது வார்டு மக்கள் சக்தி ஜனநாயக வாதியும் உண்மை ஊழியரும் மக்களுக்கு தொண்டாற்றும் பண்பு படைத்தவருமான தோழர் எஸ். முத்து அவர்களுக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்து. ஊர்வலம் முடிந்ததும் இறுதியில் அந்த வார்டு மக்களுக்கு எஸ். முத்து அவர்கள் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

தோழர். கே. வி. கே. சாமி

27-10-55 அன்று நடைபெற்ற தூத்துக்குடி நகர சபைத் தேர்தலில். தி மு. கழக மத்திய செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளருமான தோழர். கே: வி. கே. சாமி அவர்கள் காங்கிரஸ் ஆதிக்கத்தை வீழ்த்தி வெற்றி பெற்றார்.

பம்பாய்
சொற்பயிற்சி மன்றம்

25—10—55 இரவு 9-30 மணிக்கு பம்பாய் தாராவி ராஜ பவ்லிசால் 2ம் நீர் உணவு விடுதியில், உயர் திரு. பி. பி. சொக்கையப்பா அவர்கள் தலைமையில் சொற்பயிற்சி மன்றம் ஆரம்பிக்கப்பட்டு அம் மன்றத்திற்கு உயர் திரு. பி. எஸ். வேல்மயில் அவர்களை தலைவராகவும், மதுரை ஏ. எஸ். வேலன் அவர்களை செயலாளராகவும், எஸ். எம். சண்முகம் அவர்களை பொருலாளராகவும், ஏ. எல், சற்குணம் அவர்களை படிப்பக பொருப்பாளராகவும், பி. எஸ். கிருஷ்ணன், பி. எஸ். மகராஜன், டி. எஸ். செக்கு நாதன், ஆகியோரை செயற்குழுவினராகவும் நியமிக்கப்பட்டு. பலர் சொற்பொழிக்கு பின், எஸ். ராமசாமி அவர்கள் அளித்த தேநீர் விருந்துடன் கூட்டம் இனிது முடிந்தது.

பாண்டுப் தி மு. க.

27—10—55 மாலை 7-30 மணிக்கு தோழர் நம்பி நாராயணன் தலைமையில் நடைபெற்ற சொற்பயிற்சிக் கூட்டத்தில் தோழர்கள் ஈசாக், சேதுராமன், பாலன், ராமசாமி, மற்றும் பலரும் பேசினர்,

கோபி

23—10—55-ல் கோபி நகர தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் என். கே. யாகூப் தலைமையில் நடைபெற்றது, புதிய செயலாளராக தோழர் கா. பெ. துரையும், துணைச் செயலாளராக தோழர் பி, கே. சுப்பிரமணியனும், பொருளாளராக தோழர் ஜி. எ. பழனியப்பனும், மாவட்ட பிரதிநிதிகளாக தோழர் ப. உ. சாத்தான், பி, கே. தங்கராசு ஆகியோர் உட்பட 21 செயற்குழு உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது.

தேவாரம்

தி மு. கழகப் பொதுக் கூட்டம் 24—10—55ம் தேதி ஓ. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தலைமையில் நடந்தேறிய பொழுது அறிஞர் அண்ணா அ. பொன்னம்பலனார், கே. ஏ. மதியழகன் ஆகியோர், நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள், அவ்வமயம் நிறைவேறிய தீர்மானங்கள்:— திரு. தமிழக பிரதேசமான தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றின்கரை, சித்தூர் ஆகிய பகுதிகளை தமிழ்நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்றும், சென்னை மாகாணத்தை "தமிழ் நாடு" என்று அழைக்க வேண்டுமென்றும் இக்கூட்டம் இந்திய அரசியலாரை கேட்டுக் கொள்கிறது.

25—10—55ம் தேதி காலையில் தி. மு க. தோழர் ச. முத்து அவர்களுக்கும். அங்கம்மாள் அவர்களுக்கும் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் திருமணம் நடைபெற்றது.

மாயவரம்

30—10—55 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு மஜீத் மன்றத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் கூறைநாடு கடைவீதியில் நகர தி. மு. கழக துணைச்செயலாளர் தோழர் சா. மீனுட்சிசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர் என். கிட்டப்பா பேசியபின் தோழர் ஈ வெ. கி. சம்பத் அவர்கள் நேருவின் தமிழ் நாட்டு சுற்றுப்பயணம் குறித்தும் திராவிட நாடு பிரிவினை பற்றியும் பேசினர். இறுதியாக தி. மு. கழக துணைப் பொதுச்செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் மாநில மாநாடு குறித்தும் தற்கால அரசியல் நிலை பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர்.

அன்று மாலை 5 மணிக்கு மஜீத் மன்றத்தில் தோழர் ஈ. வே, கி. சம்பத் அவர்கள் தி. மு: கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

பந்தநல்லூர்

29—10—55 சனி மாலை 6 மணிக்கு பந்த நல்லூர் கடை வீதியில் தி. மு. க. பொதுக்கூட்டம் தோழர் அசோகன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ம. கோ. மணி, என். கிட்டப்பா ஆகியோர் பேசிய பிறகு தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என், வி. நடராசன் அவர்கள் தி. மு. கழக குறிக்கோள் பற்றியும் வடநாடு தென்னாடு பேதத்தை விளக்கியும், திராவிடம் பிரிய வேண்டியதை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 3-வது வட்டம்

28—10—55 வெள்ளி மாலை செயலாளர் ஜெயகீதம் தலைமையில் நடைபெற்ற தி. மு. க. செயற்குழு கூட்டத்தில் ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் சந்தா, வரவு. செலவு, கணக்குகளும், ஏழாவது ஆண்டு விழா பொதுக்கூட்ட வரவு, செலவும் சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது. மாவட்டப் பிரதிநிதி ந. குப்புராஜ் அவர்களின் விலகல் கடிதம் ஏற்றுக்கொள்ளப் பட்டது. தோழர்கள், இரா. சு. மூர்த்தி ம, செ. முனுசாமி, எஸ். பாண்டியராசன் ஆகிய புதிய உறுப்பினர்கள் செயற்குழுவில் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். கழக கருத்துக்களை வட்ட மக்களிடம் பரப்ப அமைக்கப்பட்ட பிரசாரக்குழு வி. கே. பி. சாமி, பாண்டியராசன். ஞானதேசிகன், மாரியப்பன் சுடலை முத்து ஆகியவர்களை உள்ளடக்கி திருத்தி யமைக்கப்பட்டது,

ஆம்பூர்

30—10—55 ஞாயிறு மாலை 4 மணிக்கு திருவள்ளுவர்-கழக சார்பில் இந்து உயர்நிலைப்பள்ளியில் திருக்குறள் வகுப்பு விழா ஆரம்பமாகியது. விழாவிற்கு திரு. என், எஸ், ராஜன் பி, ஏ. (இ. உ பள்ளித் துணைச்செயவாளர்) தலைமை வகித்தார். திரு, கு. மு அண்ணல் தங்கோ திருக்குறள் வகுப்பை துவக்கி வைத்து திருக்குறளை குறித்து நீண்டதொரு சொற்பொழிவு நிகழ்த்தினர் அதன் பின் திருவாளர்கள் பி. சங்கரய்யா பி. ஏ. எல். டி. வி. சந்திரநாத நயினர், ஆர். பார்த்தசாரதி புலவர்கள் ஆ. மா சிவஞானம், வா. சி சுப்பிரமணியம், எம். டி, பழனி மகாதேவன், வி, டி. சுப்பராய பிள்ளை, மு. சுப்பிரமணியம் ஆகியோர் சொற்பொழி வாற்றினர்கள் தலைவர் முடிவுரையில் திருக்குறள் வகுப்பிற்கு ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையிலும் பொதுமக்கள் கலந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். திரு. ந. கணேசன் நன்றி கூறினர்.

திருமணங்கள்

சாவித்திரி—இராமசாமி

30—10—55 காலை 9-30 மணிக்கு மாயூரம் புளியந் தெருவில் தோழர் என், வி, நடராசன் அவர்கள் தலைமையில் தோழர் மா, கி. இராமசாமி—தோழியர் சாவித்திரி ஆகியோரின் திருமணம் நடைபெற்றது.

தலைவர் தனது உரையில் திருந்திய திருமணத்தின் அவசியம்பற்றியும், மணமக்களை வாழ்த்தியும் பேசினர். பின்னர் தோழர்கள் து. காசிநாதன், சி. ஜம்பு, கிருஷ்ணமூர்த்தி, கே. எஸ். சௌந்தரராசன், என். கிட்டப்பா ஆகியோர் மணமக்களைப் பாராட்டி சொற்பொழிவாற்றினர்.

மணமக்களுக்கு நகர தி. மு. கழகம், நடராசன் வாசகசாலை, மஜீத் மன்றம் ஆகியவற்றின் சார்பிலும் தனிப்பட்டோரின் சார்பிலும் வாழ்த்துமடல்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன,

○

காந்திமதி—சிதம்பரம்

மன்னார்குடி தாலுகா லல்வாங்குடிகாட்டில் தோழர் சிதம்பரத்திற்கும் தோழியர் காந்திமதிக்கும் 19-10-55-ந் தேதி பரவாக்கோட்டை திரு ஆர். கெ, ஜெகதீசன் அவர்கள் தலைமையில் வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் நடைபெற்றது. அதுபோது திருவாளர்கள் ந. அருணாசலம். ச. சிங்காரவேல் கோ, அருணாசலம், புலவர் குழந்தைய்யா மற்றும் பலர் வாழ்த்துரை வழங்கினர்

குறிப்பு: வைதிகக் கோட்டை என்று சொல்லப்பட்ட இக்கிராமத்தில் இது தான் முதல் சீர்திருத்த திருமணம் என்பது குறிப்பிடத்தக்கது,

நட்சத்திர நடிக மன்றம்

23—10—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு அயன்புரம் அடுத்த இராமலிங்கபுரத்தில், குளத்தூர் மணி அவர்கள் தலைமையில் 'நட்சித்திர நடிக மன்றம்' துவக்கப்பட்டது.

கதை வசனம் புரசை-மா பூகான், அமைப்பாளர் அப்துல் ரசாக், இசையமைப்பு வி பி. மேகநாதன், பயிற்சியாளர் குளத்தூர் மணி ஆகியோர்களைக் கொண்டு. மன்றத்தின் சார்பாக 'வைரப்பதக்கம்' என்ற சமூக நாடகம் நடத்துவதென முடிவு செய்யப்பட்டது. நண்பர்களும். நடிகர்களும் வந்திருந்து விழாவினை சிறப்பித்தனர்.

மாயூரம் தென் பகுதி ரயில்வே மென் யூனியன்

31—10—55 திங்கள் காலை 9 மணி அளவில் மேற்படி சங்க மாயூரம் கிளை சங்க நிர்வாகிகள் தோழர் ஈ, வெ. கி. சம்பத் அவர்களிடம் தொழிற்சங்கம் பற்றி விவாதித்தனர்.

அடுத்த வாரம்

●

பாலைவன ரோஜா—தொடர்ச்சி அடுத்த வாரம் வெளிவரும்.

ஆர்—திராவிடன்

Tel: WIND. Phone: 55373

ஆர். லோகநாதன் & பிரதர்ஸ்

[Lorry Goods Booking & Forwarding Agencies]

தலைமை ஆபீஸ் : 26, லாரி ஸ்டாண்ட் ஆனைகவுனி, மதராஸ்-1
பார்சல் ஆபீஸ் : 148, தங்கசாலைத் தெரு, சென்னை-1



மதராஸிலிருந்து சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்பத்தூர், பாலக்காடு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, பழனி, திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மாயவரம், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, காரைக்குடி, கரூர், திண்டுக்கல், மதுரை, விருதுநகர், கோயில்பட்டி, தூத்துக்குடி, திருநெல்வேலி, தென்காசி, ராஜபாளையம், ராமநாதபுரம், சிவகாசி, தேனி, கம்பம், கூடலூர் முதலிய ஊர்களுக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் ஏற்றுமதி செய்கிறோம்.

N. B:—திருச்சூர், கொச்சி, திருவனந்தபுரம், கள்ளிக்கோட்டை, ஆந்திரா ஜில்லா முதலிய ஊர்களுக்கு முழுலோடுகளாக ஏற்றுமதி செய்கிறோம்.

கிளை ஆபீஸ்: 8. கீழ ஆவணி மூலவீதி, பழைய ராயல் ஓட்டல், மதுரை
" 103-1/127. பழனி ரோடு, திண்டுக்கல்
" கல்மண்டபம் சாத்தூர் ரோடு, விருநகர்
" வடக்குரதவீதி, திருநெல்வேலி டவுன்

"இன்ஸானியத்"

★

தயாரிப்பு	... ஜெமினி
வசனம்	... ராமானந்த் சாகர்
பாடல்கள்	... ராஜேந்திர கிருஷ்ணு
நடிகர்கள்	... திலீப்குமார் — பினாராய் தேவ்ஆனந்த் ஆகா—ஜிப்பி
இசையமைப்பு	... சி. இராமச்சந்திரா
டைரக்ஷன்	... எஸ். எஸ். வாசன்

பத்திரிகைகளில் வெளியான விளம்பரங்களின் நினைவு மங்குவதற்கு முன்னரே 'இன்ஸானியத்' நாடெங்கும் திரையிடப்பட்டுவிட்டது. அவசர அவசரமாக தயாரிக்கப்பட்ட இதன் கதை புதுமையானதல்ல. தெலுங்கு மொழி படமொன்றை தமிழில் 'டப்' செய்து 'கிராமப் பெண்ணுகை' உருமாற்றி சில ஆண்டுகளுக்கு முன் வெளியிட்டார்கள். 'இன்ஸானியத்' கதையும் அதுவே தான்!

துவக்கத்தில் 'கதை சினேரியா உருவாக்கியது 'ஜெமினி கதை இலாகா' என காட்டப்படுகிறது. மூலக்கதை எழுதியவரிடம் காட்டும் இந்த அநீதி விவேகமான செயலல்ல.

விளம்பர பலத்தால் வாசனுர் வடக்கிலே தமது புகழை விரிவாக்கிக் கொண்டார்! அவரது துணிச்சலும் திறமையும் குழலூதும் பாலகர்களின் முத்திரைக்கு நிலையான 'செல்வாக்கை' படைத்துவிட்டது. அடுத்தடுத்து வாசனுர் தயாரித்த இந்திப் படங்களில் தென்னிந்தியர்களே பெருவாரியாக நடித்தனர். ஆனுல் 'இன்ஸானியத்'தின் வரலாரோ முற்றிலும்வேறுபட்டது. அமோகமான புகழைக் குவித்துக்கொண்ட வடக்கத்தி நடிகர்களைநிரப்பி, ஹாலிவுட்டிலிருந்து ஜிப்பியை வரவழைத்து, விளம்பரம் அமளிபட இந்தப் படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

லட்சக்கணக்கான ரூபாய்களை 'இன்ஸானியத்' விழுங்கியிருக்க வேண்டும்! நடிகர்களின் பட்டியலே இந்த உண்மையை சொல்கிறது. இந்திப் படங்களின் கதாநாயகர்கள் கூட இதில் சில்லரைப் பாத்திரங்களில் தோன்றுகிருர்கள்!

'இன்ஸானியத்'தின் முக்கியத்துவம் இது.........

கதை

அமைதியான கிராம சூழ்நிலையில் பிள்ளைப் பிராயத்திலிருந்தே சேர்ந்து வளர்ந்தவர்கள் மங்களும், துர்க்காவும். துர்க்கா—, சௌத்திரியின் புதல்வி. சங்குரா எனும் சீமான் தனது வீரனுன பானுபிரதாபனை, கிராமத்தை கொள்ளையிட அனுப்புகிருன். பானுவின் அக்கிரமங்களை சகிக்காத துர்க்கா அவனை கன்னத்திலே அடித்து ஆவேசமாகப் பேசுகிருள். துர்க்காவின் பேச்சு பானுவை மனிதனுக்குகிறது. கொள்ளையிட வந்தவன் வெறுங்கையோடு செல்கிருன். கொதிப்பேறிய சீமான் கிராமத்தை கொள்ளையிட கட்டளையிடுகிருன். மனம் வெறுத்த பானு பதவியை விட்டெறிந்துவிட்ட புதிய மனிதனுக கிராமத்திற்கு வருகிருன். காலம் துர்க்காவையும் பானுவையும் காதலர்களாக்குகிறது. மங்கள் தனது நெடுநாளைய கனவுகளை அழித்துவிட்டு காதலர்களை வாழ்த்துகிருன். துர்க்காவின் இன்ப வாழ்வே அவனது இலட்சியமாகிறது.

சீமான் சங்குரா பானுவை கைதாக்க சூழ்ச்சி வலையை விரிக்கிருன். எத்தனையோ இன்னல்கள்.........எல்லாவற்றையும் மங்கள் துணிவோடு வெல்கிருன், துர்க்காவின் சின்னஞ்சிறு குழந்தையை அங்குராவிடமிருந்து காப்பாற்றி அவளிடம் சேர்க்கிருன். அந்த முயற்சியிலே மங்கள் உயிர்விட, உலகத்தினர் அவனது மனிதத் தன்மையை போற்றி வணங்குகிருர்கள்.

வசனம்--பாடல்கள்.

ராமனந்த சாகரின் வசனத்திலே புதுமை இல்லை எனினும் திலிப்குமார் பேசும் வசனங்கள் கவனத்தோடு எழுதப்பட்டிருக்கின்றன. ஜிப்பியிடம் போலா பாடும் பாடலில் பொருட் செறிவு நிறைந்திருக்கிறது. ராமச்சந்திராவின் இசையமைப்பு ஏனே இதில் பொலிவு பெறவில்லை. துர்க்காவின் இரு பாடல்கள் மனதிற்கு ஆறுதலளிக்கின்றன, இந்திப் படவுலகில் இணையற்ற இசை அமைப்பாளரும் கவிஞரும் தோல்வியடைந்தது விந்தையிலும் விந்தை!

நடிப்பு

மங்களாகத் தோன்றும் திலிப்குமார் அந்த பாத்திரத்திற்கே உயிரளித்துவிட்டார். அவர் இதுவரை ஏற்று நடிக்காத படைப்பு இது, எனினும் சிறந்த கலைஞரின் நிகரற்ற மேன்மையை நாம் அவரிடம் காண்கிரேும். ஆட்டுச் சண்டை உற்சாகம், காதல் ஏமாற்றம், விரக்தி, தியாக உணர்வு போன்ற பண்புகளை அவரது நடிப்பு மெருகேற்றும் வேளையில் நாம் நம்மையே மறக்கிரேும். பானுவையும் துர்க்காவையும் வாழ்த்திவிட்டு மெல்ல, மெல்ல நடந்து கொண்டிருக்கும் மங்களின் முகத்தில்தான் எத்தனை உணர்ச்சிக் குமிழிகள்...! இதயத்தின் மொழியை உணர்ச்சிகளால் உருவாக்கும் போது அவர் கலையின் சிகரத்தையே அடைகிருர்.

சோக மயமான இறுதிக் காட்சியை படம் பார்ப்போர் மறக்கமுடியாதபடி செய்திருக்கிருர் திலீப்குமார். குழந்தையை கொடுத்துவிட்டு "துர்க்கா! அது குழந்தையின் ரத்தமல்ல—என் ரத்தம்!" என்று சொல்லும் போது கண்ணீரே வந்துவிடுகிறது. உயிர் விடும் நேரத்தில் திலீப்குமாரின் நடிப்பு இயற்கையா யிருக்கிறது.

பினுராய் வழக்கம்போல கவர்ச்சியாக நடித்திருக்கிருர். காதல் உணர்ச்சியாக நினைத்துக்கொண்டு பானுவை அவர் பார்க்கும் பார்வை 'தெரு அழகி'யின் தொழில் முறையை கவனப்படுத்துகிறது. அந்தக் காட்சியை தவிர்த்திருக்கலாம். மற்றபடி பினுராயின் நடிப்பில் பழுதில்லை.

இந்தப்படத்தின் ஒரே ஒரு 'வேடிக்கை' தேவ் ஆனந்த்! பாத்திரத்திற்கேற்ற உருவ அமைப்புகூட அவரிடமில்லை. "நெடு மாறனுக" தோல்பை போன்ற சட்டையணிந்து குதிரைமீதமர்ந்து அவர் பாடும் காட்சி ஒரே அலங்கோலம்...! இந்த பாத்திரத்திற்கு இவரைத் தேர்ந்தெடுத்தது விசித்திரமாயிருக்கிறது.

மற்ற பாத்திரங்களை ஏற்று நடித்த ஜெயந்த், விஜயலட்சுமி, குமார், மோகனு' ஆகா', போன்ரேரின் நடிப்பு படத்தை மட்டரகமாக்கிவிடாமல் காப்பாற்றுகிறது.

ஜிப்பியின் நடிப்பு குறிப்பிடத்தக்கது, நம்மவருக்கு இந்தக் குரங்கு பாத்திரம் புதுமையானதால் மிகப்பலர் ஜிப்பி தோன்றும் காட்சிகளை எல்லைமீறி ரசிப்பார்கள் என்பதற்கு ஐயமில்லை.

காட்சி அமைப்பு

'சந்திரலேகா'போல காட்சி அமைப்புகள் பிரமாண்டமாக இல்லையெனினும் குறை சொல்வதற்கில்லை. சந்தை. கோட்டைச் சுவர்கள், பள்ளத்தாக்கு, காடு ஆகியவை நல்ல முறையில் இணைக்கப்பட்டுள்ளன, படைக்கள பயிற்சியும், கிராமத்தினர் கோட்டை கட்டும் காட்சியும் கவனத்தோடு எடுக்கப்பட்டிருக்கின்றன. கதைக்குப் பின்னணியான கிராம சூழ்நிலை அழகாக சித்தரிக்கப்பட்டிருக்கிறது. சண்டைக் காட்சிகள் நெஞ்சை விட்டு நீங்காதவை. காமரா கோணங்களில் கவர்ச்சியில்லை, அவசர தயாரிப்பானதாலோ, என்னவோ?

டைரக்ஷன்

புதிய 'பாணிகள்' எதுவுமில்லை எனினும் டைரக்ஷனில் 'கத்துக்குட்டித்தனம்' இல்லாதது பெரிய ஆறுதல்தானே! காட்சிகள் கோர்வையாக வருகின்றன. எடிட்டிங்கிலும் குழப்பமில்லை. வாசனுர் இதில் புதிய கலாச்சாரம்கொண்ட மக்கள் கூட்டத்தைக்காட்டுகிருர். நினைப்பு கலைக்கு கத்திவைப்பதானுலும் 'வியாபார நோக்கு' அதில் நிறைய இருக்கிறது. பொய்க்கால் குதிரையாட்டம், கரக நடனம் போன்றவைகளை வடக்கு பாராட்டும். காதலைபிய்த்து அணுவாக்கி அதனை அகண்டமாக்கி சித்தரிக்கும் வட இந்தியாவில் 'இன்ஸானியத்' புகழ் பெறுவது இயற்கை, தென்னுட்டின் கதையமைப்பு அவர்களுக்கு மிகமிகப் புதியது. சந்திரலேகா, ஆசாத், லட்சுமி, ஏக்தா ராஜா, பஹார் போன்றவை வெற்றிபெற கதையே தலையாய காரணமாயிருந்தது.

தமிழகத்தில் 'இன்ஸானியத்' ஒரு சாதனையல்ல. இந்த தன்மைகொண்ட எண்ணற்ற படங்கள் நம்மிடையே பவனிவந்துவிட்டன. திலீப் குமாரின் நல்ல நடிப்பிற்காக ஜிப்பி தோன்றும் காட்சிகளுக்காக 'இன்ஸானியத்தை பார்க்கலாம். தென்னுட்டில் ஒரு வேளை குழலூதும் பாலகர்களை குரங்கு காப்பாற்றி விட்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வாசன் போன்ற தென்னுட்டுப் பட முதலாளிகள் இந்திப்படமெடுக்க விரும்பினுல் இனிமேலாவது தென்னுட்டவர்களே அதில் முக்கிய பங்கு பெறும் வாய்ப்பினை உண்டாக்குதல் வேண்டும் என்பதை அவர்கள் தங்களின் புத்தியில் பதியவைத்துக்கொள்ள வேண்டுகிரேும்.

—சேரன் தம்பி

பம்பாய் தி. மு. கழகம்

ப. தி. மு. க. பொதுக்குழுக் கூட்டம் தாராவி வாழைக்கட்டவாடி க வ சயக அறையில் பொதுச் செயலாளர் தோழர் எஸ். தியாகராசன் அவர்கள் தலைமையில் 23-10-55 காலை 10-30 மணியளவில் நடைபெற்றது.

தோழர், த. மு பொற்கோ அவர்களால் முன் கூட்ட அறிக்கைகளையும், தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், ஜி. அப்பாசாமி, கண்ணதாசன் ஆகியோர்களிடமிருந்து வந்த கடிதங்களையும், மற்றும் பல கடிதப்போக்கு வரத்துக்களையும் வாசித்துக்காட்டப்பட்டது. அதுபோது கீழ்க்காணும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

நன்கொடை வசூலிக்க ரசீது புத்தகம் பெற்றுச் சென்ற தோழர்கள் அதற்குரியதொகையை உடனடியாக வசூலித்து 20-11-55ல் கூடுகின்ற பொதுக் குழுவில் தவருமல் செலுத்திவிட வேண்டுமெனவும், அத்தொகையை ப, தி. மு. க. பணிமனை அமைப்பதைந்தவிர வேறெதற்கும் செலவழிக்கக் கூடாதெனத் தீர்மானிக்கப்பட்டது,

தலைமை நிலையத்தில் பதிவு செய்வதற்குரிய கிளைக் கழகப் பதிவுச்சீட்டை நிரப்பி அத்துடன் உறுப்பினர் கட்டணத்தையும் 20-11-55ம் நாளைய பொதுக்குழுவில் செலுத்திவிட எல்லாக் கிளைக் கழகத்தையும் கேட்டுக்கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

தணிக்கையாளர்களாகத் தோழர்களான சு. தங்கவேலன், த, மு. பொற்கோ ஆகியோர்களைத் தேர்ந்தெடுக்கப்பட்டது. இறுதியாக தோழர் த மு. பொற்கோ அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிது கலைந்தது.

சிறு கதை

சிரிப்பு!

சீதறிப் பரவிவிட்ட மழைத் துளிகள் கருமையான தார்ரோட்டுக்கு வர்ணம் பூசியதுபோல் கருமையாக்கி மின் விளக்குகளின் ஒளியை ஈர்த்து பிரதிபலித்துக் கொண்டிருந்தது. எழும்பித் தழும்பி ஓடிக் கொண்டிருந்த கார்கள்நீரை இரைச்சலுடன் வாரி விரைத்து ஓடின. நடுநடுவே சிலர் குடையைப் பிடித்துக்கொண்டு நடந்தனர். ரிக்ஷா வண்டிக்காரன் வண்டியில் முழங்காலைக் கட்டிப்பிடித்த வண்ணம் உட்கார்ந்து கொண்டு பீடியொன்றை குடித்துக்கொண்டிருந்தான். பிச்சைக்கார பெண்ணொருத்தி குழந்தை யொன்றை மடியில் வைத்துக் கொண்டு கால்களால் எரிந்து கொண்டிருந்த அடுப்பின் இதமான சூட்டில் இன்பம் கண்டவளாக இருந்தாள். மணி ஒன்பதென அறிவிக்க சங்கூதியது...

ஜோஸ்யர் லிங்கபூஷணம் ஜன்னல் கம்பிகளைப் பிடித்தவண்ணம் பாதையையே உற்று வெறித்து கவனித்த வண்ண மிருந்தார். அவர் விழிகள்...ஏதோ விநோதமாக—விபரீதமாக நிலைத்து நின்றன. நெற்றி ஓரத்தில் ஓடிய நரம்புகள் புடைத்து துடித்துக் கொண்டிருந்தன. உதட்டை கடித்தவண்ணம் தலையை விகாரமாக கலைத்துக்கொண்டு நின்று கொண்டிருந்தார்.

உள்ளே............சிறு முனகல் "அப்ப்பா......சாமி.......யம்மா யம்மா......" சற்று உரத்தகுரல், "குவா......குவா......வவ்" நர்ஸ் வெளியே வந்தாள்.

"கார்......ஆண் குழந்தை...... பாருங்கதாயைப்போலமூக்குமுழியுமா!லிங்கபூஷணம் குழந்தையை உற்று கவனித்து தலையைத் திருப்பிக்கொண்டார். நர்ஸ் உள்ளே சென்று விட்டாள்.

துருப்பிடித்துப்போய்ஈரத்தால் சில்லிட்டுப்போன சன்னல் கம்பிகளைப் பிடித்த வண்ணம், தூரத்தில் மெல்ல நகர்ந்து கொண்டிருந்த" சைகிள் ரிக்ஷாவை வெறித்து நோக்கிக்கொண்டிருந்தார். ரிக்ஷா சிறுத்து மறைந்தது. லிங்கபூஷணத்தின் மனம் கடிவாளமற்ற குதிரைபோல்...முன்னும் பின்னும்...ஓடியது.

"பாருங்க ஏழாமிடத்தில ராகு லக்னத்தில் குரு பாக்கிறுன்...இல்லாமபோன"—

"ஏழுறை நாட்டான்பாருங்க... அப்படி செஞ்சுட்டுத்தான் போவான்... அதில சித்திரை நட்சத்திரம் வேற..."

"ம்...லக்னம் விருச்சிகம் புதன் திசை பிரமாதமான திசை...சுயபுத்தி போனு ரொம்ப நல்லாயிருக்குங்க."

"ஜோஸ்யம்பொய்யாகுதுங்க... அந்த காலத்தில இருந்து இப்பவரை...ஆமாங்க...ஏதோ ஒண்ணுந் தெரியாதவங்க அலட்டிக்கிருங்க...நடந்த விஷயத்தையெல்லாம் சரியாச் சொல்ல முடியும்னு ஏங்க நடக்கப்போறத சொல்ல முடியாது."

யார்யாரிடமோ பேசிய உரையாடல்கள் அவர் சிந்தனையில் மோதின. 'ஜோஸ்யம் பொய்யாகுமா? பொய்யாகும்!—பொய்யாகாது! ஆகாது! ஆகவே ஆகாது! எப்படி ஆகும்? லிங்கபூஷணம் தலையை முரட்டுத் தனமாகக் கோதிக்கொண்டார்.

லிங்கபூஷணம் எப்படி ஜோஸ்யரானுர் என்பது பற்றி யாரும் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை வேலையில்லா திண்டாட்டம்-ஏதோ பொழுது போக்காக ஆராய்ச்சி செய்ய படித்த கலை -தன்னை நம்பி வாழ்க்கைத் துணைவியாக பார்வதி வந்து விட்ட நிலை வயிற்றுத் தொல்லை- லிங்கபூஷணம் வயிற்றுப் போராட்டத்திற்குத் தான் ஜோஸ்யரானுர். ஆனுல் காலப் போக்கில் அவரையும் அறியாமல் அதற்கு அடிமையாகி விட்டார்.

பொருளாதார உலகில் பறக்க வேலைச் சிறகு கிடைக்கு முன்பே கடமையைக் கழிக்க லிங்கபூஷணத்தின் பெற்ருேர்கள் பார்வதியை அவர் தலையில்(?)கட்டி விட்டு சென்றனர். கள்ள மற்ற உள்ளம் கொண்ட பார்வதி ஏதோ அவர் தந்தாள் சமையல் செய்வாள் இல்லா விட்டால் அடுப்பில் பூனையைத் தூங்கவிடுவதற்கு பதிலாக தானே தலையை வைத்து படுத்துக்கொள்வாள். அவளுக்கு வயிற்றுக்கு ஒரு கவலை இருந்ததோடு மற்றுமொரு கவலையும் சேர்ந்து கொண்டது சென்ற விடமெல்லாம் "ம்...வாழப் போயி ஏழு வருஷமாவுது ஒரு குஞ்சு குட்டிய காணோம்" அது பற்றி அவர்களுக்கு பெருத்த வேதனை தான் ஆனுல் இரைம்பையின் அலறல்,அதைப் பற்றி அதிகமாக எண்ண விடவில்லை எப்படியோ லிங்கபூஷணத்திற்கு கொஞ்சம் கொஞ்சமாக வருமானம் உயர்ந்தது.

அடுத்த கவலை...ஆம் இறைப்பைக் கவலை ஓய்ந்து விட்டது—குழந்தை. ஜோஸ்யர் லிங்கபூஷணம் தம் அறிவுக்கெட்டிய மட்டும் ஜாதகத்தை ஆய்ந்த பின்பு பிறரிடம் காட்டி கேட்டுப் பார்த்தார். ஆம் அவர் ஜாதகம் புத்திர பாக்கிய மில்லாத ஜாதகம். அவள் ஜாதகத்திற்கு குழந்தை உண்டு. லிங்கபூஷணத்தால் ஒன்றும் சிந்திக்க முடியவில்லை. தன்னுல்தான் பாருவுக்கு குழந்தையில்லை என்பதை உணர்ந்து வேதனைப் பட்டு அவளுக்கு அடிக்கடி ஆறுதல் சொல்வார்.

லிங்கபூஷணம் மீண்டும் சுயநினைவுக்கு வந்தார். இருட்டில் எவனே ஒரு பிச்சைக்காரன் இருமிக்கொண்டிருந்தான். சிந்தனை தட்டியும் முட்டியும் ஓடியது.

"ம் ஒருவேளை பிள்ளை ஆசைக்காக...........ஊர்ப் பெண்களின் மலட்டுச் சொல்லைத்தட்ட...சேச்சே...என்ன புத்தி...இன்னெரு ஆண் மகனை ஏறெடுத்துக்கூட பார்க்காத பார்வதி......ம்...என் ஜாதகப்படி எனக்கு குழந்தையே கிடையாதே...ம். குழந்தை...அவரால் ஒன்றும் முடிவுகட்ட முடியவில்லை. சன்னல் வழியாகத் தெரிந்த வானத்தை வெறித்து நோக்கிய வண்ணம் அமர்ந்திருந்தார். ஜாதகத்தின் ராசிக்கட்டங்களும்; நவாம்ச கட்டங்களும் அவர் கண்கள் முன் சுழன்றன. —குரு—கேது —சனி —ராகு —செவ்வாய்—புதன்—சுக்கிரன்—சூரியன்—சந்திரன் கிரகங்கள் நட்சத்திரங்கள்......இப்படி பல. எண்ணங்களில்... எத்தனையோ கோணல்!...முறிவு!...செறிவு!... முடிவு கட்டமுடியாத மனப் போர்...! மனிதன் கண்ட கலை அவரிடம்......ஆம் ஜோஸ்யம் பொய்யாகாது என்ற முடிவு... தலைதூக்கிய வண்ணமிருந்தது. மனைவியின் ஜாதகத்தில் ஏழாமிடத்தில் நிறை ராகு.......... லக்கினத்திற்கு ஏழாமிடத்தில் ராகு...!

காலங்காட்டி இரவு பனிரெண்டென ஒலிக்க சிறிய முள்ளும் பெரிய முள்ளும் முத்தமிட முந்தமிட்ட ஒலியோவென ஐயுறும் வண்ணம் பனிரெண்டுமுறை அடித்து ஓய்ந்தது.

கால்கள் நடுங்கின! கைகள் துடித்தன! இதயம் படபடத்துக் கொண்டது. இருள்... பிரசவ அயர்வில் பார்வதி அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாள். திருப்பத்தில் திரும்பிய காரின் விளக்கொளி தாய்மைக்களை நிரம்பி வழிந்த பார்வதியின் முகத்தில் பட்டு மறைந்தது. லிங்கபூஷணம் நின்ருர்.

அவர் மூளையில் விநோதமான குடைச்சல்.........குழந்தை உன்னுடையதா? உன் ஜாதகப்படி உனக்கேதப்பா புத்திர பாக்கியம் பைத்தியக்காரா?!... யாருக்கோ ......லிங்கபூஷணத்தின் உடலெல்லாம் ஒருவித கொதிப்பு... அதிர்ச்சி......நடுக்கம். வியர்வைப் பொங்கி வழிந்தது. முகம் விகாரமாக மாறிக்கொண்டிருந்தது. கைகள்மெல்ல நடுங்கியவண்ணம் குழந்தையின் குரல் வளையருகே சென்றன......நின்றன.

குழந்தை துவண்டது!

அடிபட்ட நாய் எங்கோ ஊளையிட்டுக்கொண்டிருந்தது!

தவளைகள் 'கொரக்...கொரக்' என ஒலித்தன!

பொழுது புலர்ந்தது! அழுகையும் பிறந்தது. சுமந்த வயிற்றுக் கல்லவா தெரியும்! அழுதாள். அவ்வளவுதான் என்னுல் எழுத முடியும். கம்பனுலும் அவள் புலம்பலை வர்ணிக்க முடியாத—அது உண்மை அழுகை! லிங்கபூஷணம் மேகமற்ற நீல நிற வானை—பகலில் நட்சத்திரங்களை காண விரும்புகிறவன்போல வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அற்ப வாழ்வை இழந்துவிட்ட குழந்தை மயானத்துக்குப் போய் விட்டது.

மெல்ல ஓடியது. ஒரு நாள்! லிங்கபூஷணம் வருத்தத்தால் அமைதியாக இருந்தாரோ! கொலையின் காரணமாக அப்படி இருந்தாரோ? ம்...குழந்தை—பார்வதி இருவரும் இரு அவமான சின்னங்கள்-வானவெளிஅவருக்கு என்ன குறித்ததோ?! அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

பசி தாகமின்றி குழந்தையை படுக்க வைத்திருந்த துணியை மார்பில் அணைத்துக் கொண்டு அழும் அவளை அவர் விழியோரமாக கவனித்தார் விழிகள் சிவந்து குழிந்து போயிருந்தன. அவள் புலம்பினுள் "எப்பா...சாமி... உனக்கு நான் என்னடா தப்பு செஞ்சன். ஒன்னை கும்பிடாத நாளே கிடையாதடா...பொன்ன போல கண்ணைக் குடுத்துட்டு இப்படி பறிச்சுக்கிட்டியே...இது நியாயமா...எப்பா...பத்தினிகளுக்கு என்னென்னமோசெஞ்சன்னுசொல்லுராங்கள...எப்பா...எனக்கு இந்த ஒரு கொளந்தையை குடுக்கப்படாதா"

கடைசி சொல். லிங்கபூஷணத்தின் இதயத்தில் ஆயிரமாயிரம் வேல்களைப் பாய்ச்சியது தலை சுற்றுவது போன்ற உணர்வு.

"பாரு...ஏன் அப்படி பாக்கிற" -அவள் அந்த வீடே கிடுகிடுக்கும்படி சிரித்தாள்.

இனி அழமாட்டாள்! சிரிப்பாள்! சிரித்துக் கொண்டே இருப்பாள் நினைத்தாள் அழுவாள்! நினைத்தால் சிரிப்பாள்! சித்தம் கலங்கி விட்டபின் சிரிப்புக்கும் அழுகைக்கும் பொருளேது!

"பாரு...பாரு?"

"பாரு! பாரு! இங்கப்பாரு! பார்வதி சொல்லிவிட்டுச் சிரித்தாள்!

லிங்கபூஷணம் கற்சிலைபோல் நின்ருர். விழிகளினின்று நீர் விரைந்து வழிந்தோடியது. அலமாரியில் அடுக்கிவைக்கப்பட்டிருந்த ஜோதிடப் புத்தகங்கள் அவர் கண்முன் சுழன்றன, ஒவ்வொன்ருக அவர் கீழே எடுத்து அடுக்கினுர்.

மழை பெய்துகொண்டிருந்தது!

கொஞ்சம் மண்ணெண்ணை—ஒரு தீக்குச்சி......புத்தகங்கள் பற்றிக்கொண்டு எரிந்தன! விருப்பு வெறுப்பற்ற விகாரமான அவர்முகத்தின்விகாரத்தை தீச்சுவாலை எடுத்துக் காண்பித்தன.

கண்ணைப்பறிக்கும் நீண்ட சிதறிய மின்னல்—தொடர்ந்து ஒரு பலத்த இடி ஒலி. பார்வதி திடுக்கிட்டு அலறினுள்—அமைதி... இடியைப்போல ஒரு சிரிப்பு:

இந்த தடவை லிங்கபூஷணமும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்.

வீடு முழுவதும் ஒரே சிரிப்பு! ஓயாத சிரிப்பு! வீடே அதிரும் சிரிப்பு!

சிரிப்பு! சிரிப்பினை சுவர்கள் எதிரொலித்தன'!

சிரிப்பு! ஒரே சிரிப்பு!

சிரிப்பு...

மழை விடாமல் பெய்துகொண்டிருந்தது!

●

நெல்லை பி. காசி விசுவலிங்கம்

பஞ்சாப் கட்டுரை

நான் கண்ட சந்த்ராம் : கல்வி, கேள்வி, ஞானம்

நமது சந்த்ராம் பழைய காலத்து பி. ஏ. பட்டதாரி. 1909 ஆம் ஆண்டு அப் பட்டத்தை லாகூர் அரசினர் கல்லூரியில் பெற்றார்.

சந்த்ராம் பிறந்த புரானீபாசி கிராமத்திலிருந்து ஒருகல் தூரத்தில் பாஜ்வாடா என்ற ஒரு நகர் உண்டு.

அந்நகர் உச்சரிப்பில்தான் பாஜவாடா. இந்தி எழுத்தில் எழுதும் போதும் பாஜவாடாதான், ஆனால் ஆங்கிலத்தில் எழுதும் போது மட்டும் பாஜவா ரா (BAJWARA) என்று குறிக்கிறார்கள்: அந்த 'ரா' — 'டா' ஆவது எந்த இலக்கணமோ தெரியவில்லை. அதைப்பற்றிச் சந்த்ராமைக் கேட்டதற்கு "அப்படித்தான் பழக்கம்" என்றே கூறிவிடுத்தார். அவரது சாதி ஒழிப்புக் கழகமாகிய ஜாத்—பாத்—தோடக் மண்டலியிலுள்ள "தோடக்" என்ற சொல்கூட "தோரக்" (TORAK) என்று தான் ஆங்கிலத்தில் எழுதி வழங்கப்படுகிறது. எனவே ஆங்கிலத்தில் "RA"—"ரா"—உச்சரிப்பை பஞ்சாபியர்கள் இந்தியில் "DA"—"டா"—என்றே உச்சரிப்பார்கள் என்பதை நேரில் கேட்டறிந்தேன்.

அந்த பாஜவாடா என்னும் நகரில் D. B. School —டி. பி. பள்ளி ஒன்று இருக்கிறது. அது ஆரம்பப் பள்ளி. அப்பள்ளியில் சந்த்ராம் சிறுபையனாக இருந்தபோது ஐந்தாம் வகுப்புவரைப் படித்துத் தேறினார். அப்பள்ளிக்கு என்னை அழைத்துச்சென்று "இதுதான் நான் முதன் முதல் படித்த பள்ளி" என்று பெருமையுடனும், மகிழ்ச்சியுடனும் காட்டினார்.

அதன் பிறகு ஜலந்தர் நகரில் படிப்பு.

ஜலந்தர் நகரம் போர் தளவாடத் தலைமை நகரங்களுள் ஒன்றெனக் கேட்டிருக்கிறோம். அதை அடுத்து, வெள்ளையர்கள் தனித்து வாழுவதற்கென்று ஒரு புது நகர் காணப்பட்டது. அதுவே ஜலந்தர் கண்டோன்மெண்ட். அதை விட்டால், போலினு தோபா, கூர்த்பூர், ஷாம் சௌராஸி, நாஸ்ராலா, ஆகிய ரயில் நிலயங்களைக் கடந்து ஹோஷியார்பூர் வருகிறது, அங்கிருந்து சாலைவழி, நடைவழி சென்று தான் புரானீபாஸி அடைகிறோம்.

அந்தப் புரானீபாஸியில் பிறந்த சந்த்ராம் சுமார் இருபது மைல் கற்களுக்கு, அப்பாலுள்ள ஜலந்தர் நகரில் M. B. School—எம். பி. பள்ளியில் பயின்றார்.

அங்கே அவர் மத்திய நிலை வகுப்புத் தேர்வில் முதன்மையாகத் தேறினார். அதன் நிமித்தம் அவருக்கு இலவசச் சம்பளச்சலுகை கிடைத்தது. தொடர்ந்து பயின்று உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வில் வெற்றிபெற்று, லாகூர் சென்று கல்லூரியில் பயின்று பி. ஏ. பட்டத்துடன் வெளிவந்தார். அதோடு சௌண்டிப் பார்ப்பனர்களின் சாதிச் செருக்கை அங்கே மட்டந்தட்டி, உரிமையை விடாப்பிடியாக நிலை நாட்டி, சாதி, ஒழிப்புப்பணி வீரராகவும் வெளிவந்தார். இச்சம்பவத்தைப்பற்றிக் கடந்த வாரக் கட்டுரையிலேயே விரிவாகக் கண்டோம்.

மொழிப் புலமை :

சந்த்ராம் பி. ஏ பட்டம் பெற்றவர் என்றால், அவருக்கு ஆங்கில ஞானம் உண்டு என்று கூறவும் வேண்டுமோ!

உருது மொழியில் தெளிந்த ஞானம் பெற்றவர் அம்மொழியில் நல்ல பாண்டித்யமும். சிறந்த புலமையும் வாய்ந்தவர். அவரது உயிர் நாடியான "கிராந்தி" என்ற எழில் ஏட்டை உருது மொழியில் தான் நடத்தினார். அந்த உருது மொழி "கிராந்தி" பத்திரிகை, தெற்கேயுள்ள ஹைதராபாத்தையும், திருவிதாங்கூரையும் ஒரு கலக்கு கலக்கியே தீர்த்தது. பெரியார் நடத்திய "ரிவோல்ட்" என்ற ஆங்கிலப் பத்திரிகையின் கவனத்தையும் ஈர்த்தது. அதே "கிராந்தி." விவரம் பின்னர் அறிவோம்.

சந்த்ராம், பாரசீக மொழிப்புலமையிலும் வல்லுநர். "உமர்கய்யாம்" என்னும் எழிற் காவியம் படிப்பதில் அளவு கடந்த பற்றுடையவர்.

இந்திமொழி கற்கத்தொடங்கியது, கல்லூரியில் பி. ஏ. வகுப்புப் படிக்கும்போதுதான். ஆயினும் அதனைத் துறைபோகக் கற்றுணர்ந்து ஒரு சிரிய இந்தி எழுத்தாளர் ஆனார். தனித்தமிழ் மொழிப் புலமையில் நமது மூதறிஞர் மறைமலை என்றால், இந்தி மொழிப் புலமையில் சந்த்ராம் ஒரு மாமலை என்று முன்னமே அறிந்தோம். அவர் "யுகாந்திர்" என்ற மற்றுமொரு எழிலேட்டைத் திறம்பட நடத்தியிருக்கிறார். அது இந்திமொழிப் பத்திரிகை.

'திருவேடம்'

அவர் சொந்தமாகப் பத்திரிகைகள் ஆரம்பிப்பதற்கு முன்னால் இந்தியில் உயர்ந்த பத்திரிகைகளாம் "சரஸ்வதி", "விஸ்வாமித்ரா", 'நயா சமாஜ்', "பாஞ்சால பண்டிதர்" "சத்தர்ம பிரசாரக்", "சாந்த்", என்பன போன்ற பல பத்திரிகைகளுக்கு சரமாரியாக நூற்றுக்கணக்கான கட்டுரைகள், சாதியைக் கல்லவேண்டி, எழுதி வழங்கியிருக்கிறார். அவரது எழுத்தாற்றலைக் கண்ணுற்ற கன்யா மகா வித்யாலயத்தவர்கள்; தாம் நடத்திய "பாரதி" என்ற சஞ்சிகைக்குச் சந்த்ராம் அவர்களை ஆசிரியராக அமரச் செய்து மகிழ்ந்தார்கள், பயன்பல பெற்றார்கள். அதுவன்னியில் அவர் 1914 ஆம் ஆண்டு லாகூரில் "உஷா" என்ற மாதப் பத்திரிகையை நடத்தி ஒன்றரை ஆண்டு ஓட்டி நிறுத்தி விட்டார்.

அவரது வாழ்க்கையை முதன் முதலில் ஒரு எழுத்தாளராகவே துவக்கி கட்டுரை எழுதுவதிலும், அறிக்கைப் பத்திரங்கள (Pamphlets) தயாரித்து வெளியிடுவதிலும், வல்லுநர் ஆனார். பிறது பற்பல நூல்கள் எழுதிப் புகழ்பெற்றார். இவையெல்லாம் சேர்ந்து அவரது சாதி ஒழிப்புப்பணியென்றால் போதும். அப்பணியே ஜாத்—பாத்—தோடக் மண்டல் சிறப்பு!

அவரது எழுத்துத் திறமையையும், கருத்தோவியங்களையும் ஏற்று பாராட்டுமுகத்தான் பாஞ்சால அரசாங்கம் அவருக்கு இருமுறை பரிசுகள் வழங்கியிருக்கிறது. ஒரு புத்தகத்திற்கு ஆயிரத்து இருநூறு (1,200) ரூபாயும், மறு புத்தகத்திற்கு ஆறுநூறு (600) ரூபாயும் பரிசு பெற்றப்பெருமை சந்த்ராம் அவர்களுக்கு உண்டு.

கடந்த சில ஆண்டுகளுக்குமுன் "ஹமாரா சமாஜ்" என்ற ஒரு சிறந்த நூலை எழுதி வெளியிட்டார். சாதி ஒழிப்பு இயக்கத்தில் கிடைத்த இருபத்தைந்தாண்டு அனுபவ முதிர்ச்சியே 'ஹமாரா சமாஜ" புத்தகமாக மிளிர்கிறது.

தலை சிறந்த அரசியல்வாதிகளும், சீர்திருத்தப் பழங்களும், இலக்கியப் புலவர்களும் அப்புத்தகத்தைப் பாராட்டிப் புகழ்மாலை சூட்டியுள்ளனர். அவர்களின் முக்கியமான ஒரு சிலர்: ஜவஹர்லால் நேரு, டாக்டர். பி ஆர். அம்பேத்கார், பி. ஜி. கேர், சி. எம். திருவேதி கோபி சந்த்பர்காவ், எம். எஸ். ஆனே, சம்பூர்ணனந்த், பாரத்ரத்ன—பகவான்தாஸ் (கவர்னர் ஸ்ரீ பிரகாசாவின் தந்தை) மகா பண்டித ராகுல சங்கிருத்யாயன், ஆவர்கள், பற்பல பத்திரிகைகளும் நல்ல நல்ல மதிப்புரைகள் வழங்கி "ஹமாரா சமாஜ" என்னும் அச்சீரிய நூலைப் பெருமை படுத்தியிருக்கின்றன.

அப்புத்தகம் அப்படியே, ஆந்திராவில் இயங்கும் "ஜாதிபேத நிர்மூல மண்டலி"யால் தெலுங்கிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது, அது தமிழ் நாடும் பயனுறும் இப்பணியையும், சென்னை பல்கலைக் கழகத்தில பணியாற்றும் பேராசிரியர் ஒருவர் மேற்கொண்டுள்ளார் என்று சந்த்ராமே என்னிடம் கடிதமூலமும், நேரிலும் தெரிவித்தார் எனக்கு இந்தி தெரிந்திருக்குமேல், நானே அம்மொழி பெயர்ப்பு "வேலையைச் செய்து முடித்துவிட்டிருப்பேனே என்ற எனது உள்ள எழுச்சியை அவருக்குக் கூறினேன். மகிழ்ந்தார். இந்தி கற்கச்சொன்னார். ஆகட்டும் என்றேன். (தமிழையே இன்னும் கற்றுத் தேறவில்லை. இந்தி எங்கே கற்க? அது கிடக்குது விடு!—என்றது எனது உள்ளம்)

அவர் வகித்தப் பதவிகள் :

கல்லூரிப் படிப்பை முடித்ததும், மூன்று வெவ்வேறு பள்ளிகளில், தலைமை ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும், பணியாற்றினார். இப்பணி குறுகிய காலந்தான் நீடித்தது. பிறகு சிம்லாவில் "டவுஜ ஃபாரஸ்டு கம்பெனி"யின் கடந்த முக்கிய அதிகாரியாக வேலைபார்த்தார். இப்படிப்பட்ட வேலைகள் செய்து பிழைப்பை நடத்துவதில் சலிப்பு அடைந்த அவர் தனிப்பட்ட முறையில் திரவியந்தேட எண்ணலானார். 1914ல் லாகூரில் "உஷா" என்ற மாதாந்திர ஏட்டை ஆரம்பித்தார். ஒன்றரை ஆண்டுக்குள் நின்று விட்டது.

அதன் பிறகு 'கிருஷி ஆசிரமம்" என்ற ஒன்றை அமைத்து விவசாயத் தொழிலில் இறங்கினார் அதனூடே பல புரட்சிகரமான சாதனைகளைச் சாதித்தார், விரிவு பின்னர்.

கிருஷி ஆசிரமம் தொடர்ந்து இயங்கமுடியாத நிலை வரும்போதுதான், ஜலந்தர் நகரில் "சங்பா மகா வித்யாலயா"வின் கருவியாக விளங்கிய "பாரதி" என்ற மாதந்தரப் பத்திரிகை, சந்த்ராமை ஆசிரியராக ஏற்கத்தயாராக இருந்தது. ஏற்றது. பின்னர் இரண்டாண்டு கழித்து லாகூர் சென்று ஆங்கே தேசிய கல்லூரி ஆசிரியராகவும், பாட புத்தக ஆசிரியராகவும் பணியாற்றினார்.

இவைகளுக்குப் பின்னர்தான் ஜாத்-பாத்-தோடக் மண்டல் தோற்றுவித்த அரியபெரிய சேவைகள் செய்தார். [அவை அடுத்து]

எத்தனைக் கடவுளடா?

எத்தனைக் கடவுளடா
இத்தமிழ் நாட்டினில்—எத்தனைக்...

குத்திக் குடலெடுக்கும் வேலுடன் ஒருகடவுள்
குட்டி நிலாவொளிரும் சடையுடன் ஒருகடவுள்
கத்திக் கலியெழுப்பும் கடலின்மேல் ஒருகடவுள்
கனலின் நிறம்நிகர்த்த கமலத்தில் ஒருகடவுள்

—எத்தனைக்...

தித்திக்கும் தேன்தரும்வெண் தாமரையில் ஒருகடவுள்
முத்துப்பல் மாதர்கள் இடையில் ஒருகடவுள்
எத்திக்கும் நடுநடுங்கும் அரியின்மேல் ஒருகடவுள்
எலியின்மேல் ஒரு கடவுள் காக்கைமேல் ஒரு கடவுள்

—எத்தனைக்...

காற்றுக் கொருகடவுள் கனலுக் கொருகடவுள்
காதற் கொருகடவுள் கடலுக் கொருகடவுள்
வீட்டுக் கொருகடவுள் வீதிக் கொருகடவுள்
மேலோர்க் கொருகடவுள் தாழ்ந்தோர்க் கொருகடவுள்

—எத்தனைக்...

இத்தனைக் கடவுளாலும் என்ன பயனடைந்தோம்
இன்னல் தவிர்ந்ததுண்டா? இன்பம் விளைந்ததுண்டா?
அத்தனைக் கடவுளையும் அறிவு பிறந்ததனால்
அழித்திடு வோம்தோழா விழித்தெழு வாயின்னே.

—எத்தனைக்...

—மயிலை. இளநாகன்

கேள்வி? பதில்.

கே. நவநீதம் தியாகராயநகர்

கே: இந்தியை எதிர்ப்பவர்கள் குழப்பக்காரர்கள் என்று மந்திரி பக்தவத்சலம் தியாகராயநகர் கூட்டத்தில் பேசியிருக்கிறார். இது உண்மையா?

ப: தோழரே, அமைச்சா பக்தவத்சலம் பேசியதைப் பற்றிக் கேள்வி கேட்க வந்த தாங்களும் குழப்பமடைந்து விட்டீர்கள் போலும்! அமைச்சர் அவ்வாறு பேசியது உண்மையா — அல்லது இந்தியை எதிர்ப்பவர்கள் குழப்பக்காரர்கள் என்பது உண்மையா இதில் எந்த கேள்வியைத் தாங்கள் கேட்கிறீர்கள் என்று தெரியவில்லை.

எனினும் இரண்டுபிரிவுகளாக இதற்கு பதில் கூறுகிறேன். 1. அமைச்சர், தியாகராயநகர் கூட்டத்தில் தாங்கள் குறிப்பிட்ட வார்த்தைகளைக் கொட்டி அளந்திருக்கிறார் என்பதை பத்திரிகைகள் வாயிலாக அறிந்தேன். (2) இந்தியை எதிர்ப்பவர்கள் திராவிட இயக்கத்தினர் மட்டுமல்ல. கல்வித் துறையில் மூக்கிய தலைசிறந்த மேதையாயும் பொறுப்புடையவராகவும் விளங்குகிற சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் லட்சுமணசாமி அவர்களும் அவரைப் போன்றுரும் தக்க ஆதாரங்களைக் காட்டி எதிர்த்து வருகின்றனர். எனவே இந்தியை எதிர்ப்பவர்கள் குழப்பக்காரர்கள் என்று கூறும் அமைச்சர் பக்தவத்சலம் அவர்களின் மூளை குழம்பிபிருக்கலாமென்று எண்ணுகிறேன். அப்படி யிருக்குமானால் அமைச்சர் குழுவில் ஒருவரான மராமத்து மந்திரி ராமநாதபுர ராஜாவிடம் சொல்லி, அமைச்சர் பக்தவத்சலம் மூளையை மராமத்து செய்யும்படியும் அதுபோலவே மருத்துவ மந்திரி எ. பி. செட்டி அவர்களிடம் தெரிவித்து சிகிச்சையும் செய்தால், அமைச்சர் பக்தவத்சலம் தனது குழப்ப நிலையிலிருந்து தெளிவு பெறக்கூடும்.

ஃ

டி. டி. அருணாசலம், இராயபுரம், சென்னை.

கே: தட்சிணப் பிரதேசம் அமைக்க வேண்டுமென்று சென்னை மேயர் சிதம்பரம் செட்டியார், சபாநாயகர் கோபால மேனன், இன்னும் சில தலைவர்கள் சொல்லுவதை திராவிட நாடு கேட்கும் உங்கள் தி. மு. கழகம் எதிர்ப்பது ஒன்றும் புரியவில்லையோ ?

ப: தோழரே, சபாநாயகர் கோபால மேனன்—மேயர் சிதம்பரம் போன்றவர்களின் வாயிலாக எழுப்பப்பட்டுள்ள தட்சிணப் பிரதேசமானது இந்தியப் பேரரசின் எவ்விதப் பிடிப்பிலும் சிக்க வைக்காமல், சுதந்திரமுடன் இயங்குமா? அதுபோலவே தட்சிணப் பிரதேசத்தைச் சார்ந்த மாநிலங்கள் மொழிவழி அடிப்படையில் நின்று தங்கள் தங்கள் ஆட்சிமுறையை பிறரின் குறுக்கீடு யில்லாமல் செய்வதற்கு வழிவகை யிருக்குமா? இம்முறையில் தட்சிணப் பிரதேசம் அமைக்கப்படுமென்று சபாநாயகர்—மேயர்களுமட்டுமல்ல வேறு யார் கூறினும் திராவிட முன்னேற்றக் கழகம் மனமார வரவேற்கத் தயாரா யிருக்கிறது. அதில்லாமல் பழைய சரக்கு புதிய மொந்தை என்பார்களே—அந்தக் கதையைப்போல சென்னை ராஜ்யத்திற்கு தட்சிணப் பிரதேசம் என்று பெயரை மட்டும் சூட்டி அழகு பார்க்க முனைவது அறிவுடமையாகா தல்லவா.

ஃ

ஆர். மதியழகன். கோவை.

கே: திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் காலத்துக்குப் பிறகு திராவிடர் கழகம், தி. மு. க. ஒன்றுசேர்ந்து விடுமா ?

ப: அய்யா மதியழகனாரே, திராவிட கழகம்—தி. மு. கழகம் ஆகிய இரண்டும் ஒன்று சேராவிட்டால் ஒன்றும் பாதகமேற்பட்டு விடாது. அதைவிட பெரியார் அவர்கள் இன்னும் நீண்ட காலம் நீடூழி வாழட்டும்.

ஃ

எம். ஆர். கண்ணன், மயிலை.

கே: 1956-ம் வருஷம் நடக்கப் போகும் பொதுத் தேர்தலுக்குப் பிறகு கல்வி மந்திரி சுப்ரமண்யம் முதல் மந்திரியாகி விடுவார் என்று எனது சிநேகிதர் சொல்லுகிறார் இப்படி நடக்குமா ?

ப: தோழரே — அஞ்சா நெஞ்சன் ஜோஸ்யர் அல்ல, ஏதோ சொல்வதற்கு. முதலாவதாக அடுத்த பொதுத் தேர்தலில் கல்வி அமைச்சர் தோழர் சுப்ரமண்யம் அவர்கள் வெற்றிபெற்று சட்டசபைக்கு வருவாரா யென்பதை உங்கள் சிநேகிதரையே கேளுங்கள்! ஏனெனில் அடுத்த தேர்தலுக்குப் பிறகு மேல்சபைகள் கூட இருக்கப் போவதில்லை யென்றும் தெரிகிறது.

ஃ

எஸ். கே. தாஸ், சிதம்பரம்.

கே: அய்யா அஞ்சா நெஞ்சனே, திருவாங்கூர் ராஜ்யத்தில் சேர்த்து விட வேண்டும் என்று சிபார்சு செய்யப் பட்டிருக்கும் பீர்மேடு நெய்யாற்றங்கரை தேவிகுளம் பகுதிகளை தமிழ் நாட்டுடனேயே இருக்க வேண்டும் என்று போராட எல்லா கட்சியும் ஒன்றுகச் சேர வேண்டும் என்று எல்லா கட்சிக்காரர்களும் பேசிக் கொண்டே யிருந்தால் ஒன்றுகச் சேர்த்துவைப்பது யார் ?

ப: ஏன், தங்களுக்கு அப்படணியைச் செய்ய வேண்டுமென்ற ஆசை யிருக்கிறதா? அவ்விதமிருந்தால் கூட, எல்லா கட்சிகளும் ஒன்று சேர்ந்து போராட வேண்டிய அவசியம் ஏற்பட்டால், காலம் அதனை நினைவூட்டும். அதுவரை சற்று பொறுமையா யிருங்கள்.

ஃ

கே. கிருஷ்ணசாமி, மதுரை டவுன்.

கே: முதல் மந்திரி காமராச நாடாரை பேரிகை பத்திரிகை திடீரெனத் தாக்க முன் வந்திருக்கிறதே ரகசியம் என்ன ?

ப: பேரிகையில்தான் விஷயம் வெளி வருகிறதே—அதைவிட நான் என்ன ரகசியம் கூற யிருக்கிறது! அப்படி ஏதாவது ரகசியம் இருந்தாலும் நான் அதைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம்தான் என்ன யிருக்கிறது!

ஃ

அ. சுப்பிரமணியம், இலச்சுமணபுரி பெங்களூர்

கே: அய்யா அஞ்சா நெஞ்சனே, தாங்கள் தற்போது எந்த நாட்டுப் பிரஜை? நான் திராவிட நாட்டுப் பிரஜை என்கிறேன், என் நண்பரோ இந்திய நாட்டுப் பிரஜை என்கிறார் இதில் யார் சொல்லுவது சரி ?

ப: தோழரே, இன்றுள்ள அரசியல் சட்டப்படி நாமனைவரும் இந்தியப் பிரஜைகள்தான் என்பதை உணரவும்.

ஃ

எல். வெங்கோப ராவ், தஞ்சை

கே: இப்போது நடந்த நகர சபைத் தேர்தலில் காங்கிரஸ் பலம் வளர்ந்ததா— தேய்ந்ததா ?

ப: காங்கிரசின் பலம் தேய்ந்தது மட்டுமல்ல; அதனின் ஆதிக்கம் பண்ணைக் கவ்விய நகரசபைகளில், சுயேச்சைகளிடம் குனிந்து கொடுத்துப் பேரம் பேசி எப்படியாவது நகர சபைகள் தங்களின் செல்வாக்கிலேயே இருந்து வர—முதலமைச்சர் காமராசர் கூட தமது பதவியின் செல்வாக்கைப் பயன் டடுத்துவதாகவும் தெரிகிறது.

ஃ

ஆர். ஆர். நாதன், திருச்சி

கே: தேவிகுளம், பீர்மேடு. நெய்யாற்றங்கரை முதலிய தமிழ்ப் பகுதிகளை தமிழ் நாட்டுடன் சேர்ப்பதற்கு போராட்டம் எல்லாக் கட்சியும் சேர்ந்து நடத்தினால் யார் தலைமையில் நடைபெறும்?

ப: தேவிகுளம், பீர்மேடு முதலிய பகுதிகளை போராட்டம் மூலம்தான் பெற முடியுமென்ற நிலைமை ஏற்படின், நீங்கள் மனதில் எண்ணியுள்ள அந்த எல்லாக் கட்சிப் பிரதிநிதிகளும் சேர்ந்து முடிவு செய்வதற்கேற்ப போராட்டத் தலைவர் யார் என்பதை அறிவிக்கப்படும்.

ஃ

என். எம். செங்குட்டுவன். கோவை

கே: ராஜ்ய புனரமைப்புக் கமிஷன் அறிக்கை காங்கிரஸ் தலைவர்களுக்குள்ளே நெருக்கடி உண்டாக்கியிருக்கிறதே அது எப்படி முடியும்?

ப: வடநாட்டு ஆதிக்கம் தென்னாட்டினையும் பொதுவாக மற்ற மாநிலங்களையும் இறுக்கிப் பிடித்துச் சுரண்டும் நெருக்கடியைத் தகர்த்தெறியும்.

ஃ

தமிழன்பன், திருவல்லிக்கேணி

கே: நவம்பர் 21-ந்தேதி கூடப்போகும் சென்னை சட்டசபைக் கூட்டத்தில் திருவாங்கூர் ராஜ்யத்திலிருக்கும் தமிழ் தாலுக்காக்கள் முழுதும் தமிழ் நாட்டுடன் சேர்க்க வேண்டுமென்று ஏகமனதாக தீர்மானிப்பார்களா?

ப: இப்பிரச்னையில் துரோகம் செய்யும் உறுப்பினர்களோ அல்லது கட்சிகளோ அடுத்தத் தேர்தலில் உங்களிடம் வரும்போது அதைத் தீர்மானிக்க வேண்டிய சக்தி உங்களிடம் இருக்கிறதல்லவா.

ஃ

டி. ஆர். கமலநாதன் அரக்கோணம்

கே: அய்யா அஞ்சா நெஞ்சனே கடவுள் இல்லை யென்ற எண்ணத்தால்தான் இக்காலத்தில் அக்கிரமங்கள் வளருகிறது என்று எனது நண்பர் ஒருவர் அடிக்கடி கூறுகிறார். இதற்கு என்ன பதில் சொல்லுகிறீர்கள்?

ப: உங்கள் நண்பர் என்ன, தங்களை ஆஸ்திகர் என்று எண்ணிக் கொண்டுள்ள அத்தனை பேர் பாடும் பல்லவியும் அது தான்! ஆனால் உங்கள் நண்பரைக் கேளும், திருடித் திருமதில் கைங்கர்யம் செய்த பக்தர்கள், குருபத்தினியைக் கற்பழித்தவன், மனைவியை சூதாட்டத்தில் அடகு வைத்தவர்கள் வாழ்ந்தது ஆஸ்திகம் தலைவிரித்தாடிய அந்தக் காலத்திலா அல்லது இந்தக் காலத்திலா என்று கேளுங்கள். பிறகு மேலும் விளக்கம் கூறுகிறேன்.

தோழர்களே !

திராவிடன்

சந்தாதாராகச் சேர்ந்து ஆதரவு தர வேண்டுகிறோம்.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் என். வி. நடராசன், சோமு அச்சகம், 16, ரிலையன்ஸ் ரைஸ்மில் தெரு, சென்னை-1